விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 19 திங்கட்கிழமை (02.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

# கூட்டமைப்பு சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும்?

## வடக்கு முதலமைச்சர் விளக்கம்



(யாழ்ப்பாணம்) பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எவ்வாறு செல்லும் என்று ஓரளவுக்கு அனைவருக்கும் தெரியும். அதனால்தான் அதில் மகிந்த கையெழுத்திடவில்லை. அவருக்கு தோற்கவிருப்பமில்லை. எனினும் நாங்கள் வந்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது. அதற்கமைவானதாக கூட்டமைப்பின் நடவடிக்கை இருக்க வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## பருத்தித்துறையில் பேருந்து சாரதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பேருந்து மோதியதில் படுகாயமடைந்த வயோதிப மாதுவை வைத்தியசாலையில் அனுமதித்த பேருந்து சாரதி வைத்திய 23

## 6 தமிழ் எம்.பிக்கள் பிரதமருக்கு ஆதரவு

(கொழும்பு)

நம்பிக்கையில்லா பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்க ஆறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் முற்போக்கு கூட் 23

## கூட்டமைப்பின் முடிவு இன்று

(யாழ்ப்பாணம்)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் பொது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவிப்பதா? எதிர்ப்பதா? என்பது 23

## போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய இலகு கடன் திட்டம்

### மே மாதம் தொடக்கம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த என்றப்பிறைஸ் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் புதிய இலகு கடன் திட்டம் எதிர்வரும் மே மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

வடக்கில் போரால் பாதிக்கப்பட்டு, சுயதொழில் மேற்கொள்ளும் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதாவது வடக் 23

## ஐ.தே.க பாராளுமன்றக்குழு இன்று மீண்டும் கூடுகிறது

### பிரேரணையை தோற்கடிக்க வியூகம்

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிப்பது குறித்து ஆராய இன்று மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழு பிரதமர் தலைமையில் கூடுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் தனித்தனியே சந்தித்து தனது நிலைப்பாட்டினை பிரதமர் வெளிப்படுத்துவார் எனவும் கூறப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் 23

## இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் முயற்சி

(மாலி)

மாலியில், ஐ.நா அமைதிப்படையில் இடம்பெற்றுள்ள இலங்கை இராணுவத்தின் தொடரணியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படவிருந்த, பாரிய கிளைமோர் குண்டுத் தாக்குதலினை இலங்கை இராணுவத்தினர் முறியடித்துள்ளனர்.

இலங்கை இராணுவ 23

## கார் வாங்கியமைக்கு விருந்து வைத்த இளைஞன் மரணம்

(ஹட்டன்)

ஹோட்டல் மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் வில்பிரட் நகரை சேர்ந்த 26 வயதுடைய சம்பந்தன் பிரேம்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார். 24

### பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு

## கடன் வழங்கும் போது பேரம் பேசப்படுகிறதா?

(கொழும்பு)

பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கடன் வழங்கும் போது பேரம் பேசப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து தாம் ஆராய்வதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அவற்றிற்கு பதிலளித்த 23

## யாழ்.வைத்தியசாலை வீதியில் முதியவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)



யாழ். வைத்தியசாலை வீதியில் நேற்று மீட்கப்பட்ட முதியவருடைய சடலத்தை அடையாளம் காட்டுமாறு யாழ். போதனா 23

## யாழின் பல பகுதிகளில் நேற்று திடீரென பலத்த மழை

(சுதுமலை)

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் நேற்று திடீரென பலத்த மழை பெய்துள்ளது.

மானிப்பாய் மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களில் நேற்று மாலை 2 மணியளவில் பெய்ய ஆரம்பித்த மழை சுமார் ஒரு மணி நேரம் கொட்டித் தீர்த்துள்ளது.

இதன்போது பலமான 23

## வெளிநாட்டிலுள்ள இராணுவ வீரர்கள் கைது செய்யப்படும் அபாய நிலைமை!



### ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் எச்சரிக்கை

(கொழும்பு)

போர்க் குற்றங்கள் தொடர்பில் விசேட நீதிமன்றம் நிறுவப்படாவிடின் வெளிநாட்டிலுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படும் நிலைமை உருவாகலாமென ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அறிவித்துள்ளது.

விசேட நீதிமன்றம் ஒன்றை இலங்கை நிறுவாவிட்டால் சர்வதேச நீதிமன்றம் கட்டமைப்பு தொடர்பான விடயத்தை எதிர் 23

## நம்பிக்கையில்லா பிரேரணை நிச்சயமாக வெற்றி பெறும்!

### கூட்டு எதிரணியினர் நம்பிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை நிச்சயமாக வெற்றி பெறும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன 23

# இளைஞர் குழுக்களுக்கிடையே மோதல்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் அந்தோனியார் கோவில் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த சம்பவத்தையடுத்து அங்கு பொலிஸார் மற்றும் விசேட படையினர் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமடைந்ததாக தெரியவருகிறது.

பாசையூர் இளைஞர்களுக்கும் ஈச்சமோட்டை இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த மோதல் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்ப்வம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-1)

# வடமராட்சி கிழக்கிற்கு சந்திரிகா இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்று திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நல்லிணக்க அலுவலகத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட கட்டிடம் இரண்டினை அவர் திறந்துவைப்பார்.

இன்று மாலை 3 மணிக்கு மணற்காட்டில் அமைக்கப்பட்ட மீன்சந்தையினையும் மாலை 4 மணிக்கு அம்பன் பகுதியில் அமைக்கப்பட்ட முன்பள்ளி ஒன்றினையும் அவர் திறந்து வைப்பார். (மு-60)

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் சிற்றம்பலம்



பூநகரி ஆலங்கேணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் சிற்றம்பலம் அவர்கள் 30.03.2018 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம்-ராசம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற வேதவனம்-கனகம்மா தம்பதிகளின் மருமகனும், பூமணிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் சுதாஸ்கரன், தயாகரன், தயாழினி, யசோதரன், சுதர்சினி ஆகியோரின் அன்பு தந்தையும், தயாநிதி, வினோதினி, சிறீஸ்கந்தராஜா, கஜேந்தினி, ஜெயதாஸன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நல்லதம்பி (ஓய்வுநிலை வருமானவரி மேற்பார்வையாளர்) மற்றும் பரமு (ஓய்வுநிலை தபாலதிபர்), சுந்தையா (இந்தியா), ஞானமணி, வேலுப்பிள்ளை, கோபாலசுந்தரம், அருந்தவநாயகி (ஆசிரியர்-கிளி/சாந்தபுரம் மகா வித்தியாலயம்), சிவபாதசுந்தரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும், செல்லம்மா, மகேஸ்வரி, பொன்னம்பலம், மகேஸ்வரி, நாகேஸ்வரி, புஸ்பராணி, குமாரகுலசிங்கம் (ஓய்வுநிலை தபாலதிபர்), ராஜலட்சுமி (சுவிஸ்), பாலசுப்பிரமணியம், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பராசக்தி மற்றும் புவனேஸ்வரி, இந்திராதேவி (பிரதி அதிபர்-கிளிநொச்சி மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற சிறீகாந்தன் ஆகியோரின் மைத்துனரும், நர்மதா, திவிசன், சிலக்சன், தர்சிகன், றக்சன், லதுசன், நிதுசன், அகர்சா, அரிஸ்கா, ரித்விக், அஸ்விக் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2018) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொள்ளுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலங்கேணி, பூநகரி.** (3481) **தகவல்:குடும்பத்தினர்**

### திருமதி பேட்டன் ரஞ்சித் யோகேஸ்வரி



புங்குடுதீவை பிறப்பிடமாகவும் 115, பொன்னம்பலம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேட்டன் ரஞ்சித் யோகேஸ்வரி 30.03.2018 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2018) திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் 115, பொன்னம்பலம் வீதி, அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.115,**
**பொன்னம்பலம் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**தொ.பே:0777170069**

(3479)


## ஆசிரியர் தேவை

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையத்திற்கு கணிதம், தமிழ், சுகாதாரம், வரலாறு, புவியியல், சைவசமயம், கிறிஸ்தவம் (தரம் 1–11 வரை) கற்பிக்க கூடியவர்கள் தேவை.

**தொடர்பு:**
**0770872903, 0217917791**

(கி-2088)

## PHYSICS
## A/L 2020

**பிரிவு**-I
பொறியியல்-அலகு II
ஆரம்பம்:4.4.2018 புதன்-6.00 p.m
(திங், புத, வெள்-6.00 p.m)

**பிரிவு**-II
அளவீடுகள்-அலகு-I
ஆரம்பம்-4.4.2018 புதன்-3.00 p.m
(திங், புத, வெள்-3.00 p.m)

ஆசிரியர்-
**திரு.ம.ஸ்பெல்மன்** (Bsc, PGDE)
இடம்:10/10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில், கியூடெக்-கரித்தாஸ் அருகாமை)

■ Personal Class, Group Class ஆக கற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

T.P:NO:-0776116724

(3488)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வழங்கும்

**A/L 2020 மாணவர்களுக்கான ரூபா 140,000/= பெறுமதியான புலமைப்பரிசில்**

**க.பொ.த (சா/த) - 2017இல் 9A சித்திகளைப் பெற்ற மாணவர்களே!**

நீங்கள் யாழ்.மத்திய கல்லூரியில் **A/L 2020** பிரிவுக்கு இணைந்து கொள்ளும் பட்சத்தில் ரூபா **140,000/=** (மாதந்தோறும் ரூபா **5,000/=**ப்படி 28 மாதங்களுக்கு) பெறுமதியான புலமைப்பரிசில்கள் உங்களுக்கு வழங்கப்படும் என்பதை. மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வருமானம் குறைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்துக்கும் மற்றும் உள்ளக புலமைப்பரிசில் திட்டத்துக்கும் உதவி புரிய விரும்பும் பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பழைய மாணவர் சங்கத் தலைவர் R.L சொலமன் (0772334215), உதவி செயலாளர் S.சுபேதர் பெர்னான்டோ (0772528824), பொருளாளர் A.கபில்நேசன் (0771457159) மற்றும் என்னுடன் (0777642379) தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

"Central Flag must never be lowered"

**திரு.ம.வித்தியானந்தநேசன் M.Phil**
**செயலாளர், பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.**
mvithiyananthanesan@gmail.com

(C-2048)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

# ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

## கொழும்பு அரசியலில் மீண்டும் பரபரப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை மறுதினம் 4 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசிய கட்சியினர் தயாராகி வருவதாக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.



பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோல்வியடைய செய்து பிரதமருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நம்பிக்கையை உறுதி செய்ய முடிந்தால் ஐக்கிய தேசியக் கட்சி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் எனக் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியில் உள்ள முக்கிய அமைச்சர் ஒருவர் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தயாரித்து வருவதாக அந்தத் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் சட்டத்தரணிகள் சிலர், மகிந்த தரப்பினருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு வருவதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய அரசாங்கத்திற்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளமையால் கொழும்பு அரசியல் ஸ்திரமற்ற நிலையை அடைந்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான தகவல்கள் வெளியாகி உள்ளமையால் அரசியல் தளத்தில் பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது. (இ)

# தொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்க யாழில் செயலமர்வு

## வடக்கு விவசாய அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உலக வங்கி நிதி உதவியுடன் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு மற்றும் வட மாகாண விவசாய அமைச்சின் அனுசரணையுடன் பழங்கள், மரக்கறிப் பயிர்கள் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, வளர்ப்பு மீன் உற்பத்தி, வாசனைத் திரவிய பயிர் வளர்ப்பு மற்றும் இத்துறைகள் சார்ந்த கைத்தொழில் துறை விருத்திக்கு இணைக் கொடை நிதி வழங்குதல் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் விவசாய வியாபார அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் செயற்றிட்டம் ஊடாக தனியார் நிறுவனங்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் என்பவற்றிற்கு கடன் உதவி வழங்குதல் ஆகிய இரு செயற்றிட்டங்களுக்கான பதிவு செய்யப்பட்ட பயனாளிகளை தெளிவுபடுத்தும் செயலமர்வு 05.04.2018 அன்று காலை 8 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே பதிவு செய்யாத இச்செயலமர்வில் பங்குபெற விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் 021 221 4774 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என வடக்கு விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ)

# சபாநாயகர் ஆசனத்தில் திலங்க அமரக்கூடாது

## ஐ.தே.க.திட்டவட்ட அறிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் ஆசனத்தில் திலங்க சுமதிபால அமரக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான பிரேரணை வாக்கெடுப்பின் போது பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தால் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட நேரிடும் என அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

திலங்க சுமதிபால சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தால் நாடாளுமன்றிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி வெளிநடப்புச் செய்யும் என அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் ஆகியோர் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால பிரதமரை ஊடகச் சந்திப்புக்களில் விமர்சனம் செய்து வருகின்றார்.

அண்மையில்எஸ்.பி.திஸாநாயக்க நடத்திய செய்தியாளர் சந்திப்பில் திலங்க சுமதிபாலவும் பிரதமரை விமர்சனம் செய்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் திலங்க சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து வாக்கெடுப்பு நடத்துவது பொருத்தமானதாக அமையாது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# கூட்டமைப்பிற்குள் இருக்கின்றவர்களே தமிழரசுக் கட்சியைத் தாக்குகின்றனர்

## அஹிம்சையால் துர்ப்பாக்கிய நிலை–யோகேஸ்வரன் புலம்பல்

(ஏறாவூர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கின்றவர்களே தமிழரசுக் கட்சியைத் தாக்குகின்றார்கள். அந்த அடியை வாங்கிக் கொண்டு தந்தை செல்வா காட்டிய அஹிம்சை வழியில் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நாம் இருக்கின்றோம் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 120 ஆவது பிறந்த தின நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தந்தை செல்வா எமது மக்களுக்காக ஆற்றியது மிகப் பெரிய செயற்பாடுகள், அவர் முஸ்லிம் மக்களுக்கு சரிசமமான அந்தஸ்தை வழங்கி தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் த்தான் அவரின் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.


அப்போது முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான கட்சிகள் எதுவும் இருக்கவில்லை, அவர்களும் தமிழரசுக் கட்சியில் தான் இருந்தார்கள். ஆனால் தற்போது முஸ்லிம்கள் மத்தியில் அதிகமாக கட்சிகள் உருவாகிக் கொண்டு வருகின்றன.

எனவே தமிழ் பேசும் மக்களுக்குரிய கட்சியாக இந்த தமிழரசுக் கட்சி இருந்தாலும் கூட இன்று முஸ்லிம்களே தமிழரசுக் கட்சியை விமர்சிப்பதைக் காணக் கூடிய தன்மை இருந்துகொண்டிருக்கின்றது.

தற்போது தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு முஸ்லிம்கள் வாக்களிப்பதில்லை. ஆனால் தந்தை செல்வா அன்று தமிழ் பேசும் மக்கள் என்றுதான் அவர்களுக்காக குரல் கொடுத்தார்.

தற்போது இருக்கின்ற எமது தலைவர் சம்பந்தனும் நாம் பெறுகின்ற தீர்வு தமிழ் பேசும் மக்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றார்.

எனவே எமது தலைமைகள் தமிழ் பேசும் மக்கள் எனும் ரீதியில் முஸ்லிம் மக்களை நேசிக்கின்ற போது தமிழ்த் தரப்புக்கு முஸ்லிம்களோடு இணைந்த ஒரு நியாயமான தீர்வு வருவதற்குத் தந்தை செல்வா எதிர்பார்த்த வடக்கு- கிழக்கு இணைந்த ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கு முஸ்லிம் மக்களும் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.



தந்தை செல்வா நேசித்த முஸ்லிம் மக்கள் தந்தை செல்வாவை நேசிப்பவர்களாக இருந்தால் அவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு உடன்பட்டு வர வேண்டும்.

நாங்கள் எமது தந்தை செல்வாவின் வழியில் எமது இலங்கைத் தமிழரசுக் கட்சியை பாதுகாத்துச் செல்வோம்.

எமது மக்களுக்காக நீண்ட காலம் போராடிய கட்சி தமிழரசுக் கட்சிதான். அது எப்போதும் தமிழினத்தோடு தான் இருக்கும். ஒருபோதும் சோர்ந்து போகாது.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் இலங்கை தமிழரசுக் கட்சியை வீழ்ச்சியுறச் செய் வதற்கோ, அதன் சின்னத்தை மாற்றியமைப்பதற்கோ ஒருபோ தும் இடமளிக்க மாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இரண்டாம் உலகப் போரின் போது மூழ்கிய பாரிய கப்பல் திருமலையில் கண்டுபிடிப்பு

(திருமலை)

இரண்டாம் உலகப் போரின் போது திருகோணமலை கடற்பரப்பில் மூழ்கிய பிரித்தானிய சரக்குக்கப்பல், பெரும்போராட்டத்திற்கு மத்தியில் 75 ஆண்டுகளுக்குப் பின்னர் கடலின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.



1924 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி சேவைக்கு விடப்பட்ட எஸ் எஸ். சகாயிங் SS Sagaing என்ற புகழ்பெற்ற இந்த 138 மீற்றர் நீளமான சரக்குக் கப்பல் 1942ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்றிருந்த போது ஜப்பானின் குண்டு வீச்சு விமானத் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் மூழ்கிப் போனது.



இந்தக் கப்பல் திருகோணமலை துறைமுகப் பகுதியில் சுமார் 35 அடி ஆழத்தில் மூழ்கியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல மாத போராட்டத்தின் பயனாக இலங்கை கடற்படையைச் சேர்ந்த சுழியோடிகளின் உதவியுடன் கடற் பகுதியின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கப்பலை கடலின் மேற்பரப்பிற்கு கொண்டுவரும் பணிகள் கிழக்கு கடற்படையின் சுழியோடிக் கட்டளை அதிகாரி கப்டன் கிரிஷாந்த அதுகோறளையின் தலைமையில் 98 கடற்படைச் சுழியோடிகளால் கடந்த 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)


# கைத்துப்பாக்கியுடன் கைதான மைத்திரி பிணையில் விடுவிப்பு

நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர் மைத்திரி குணரத்ன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர் கடுகண்ணாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மைத்திரி குணரத்ன, கைத்துப்பாக்கிகளுக்கான அனுமதிப்பத்திரத்தை காண்பித்ததையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார். (இ)

# ஜொகனஸ்பேர்க் டெஸ்ட்
## தென்னாபிரிக்கா முன்னிலை



அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக ஜொகனஸ் பேர்க்கில் நடக்கும் 4ஆவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி வலுவான முன்னிலையில் உள்ளது.

தென்னாபிரிக்க - அவுஸ்திரேலியா அணிகள் மோதும 4ஆவதும் இறுதியுமான டெஸ்ட் ஜொகனஸ்பேர்க் நகரில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 488 ஓட்டங்கள் குவித்தது.

நேற்று முன்தினம் இரண்டாம் நாள் முடிவில், முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி, 6 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பெய்ன் (5), கம்மின்ஸ் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பெய்ன் அரைச்சதம்**

நேற்றைய 3ஆம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த அவுஸ்திரேலியாவின் பெய்ன், கம்மின்ஸ் அரைச் சதமடித்தனர். ஏழாவது விக்கெட்டுக்கு 99 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது கேஷவ் மகராஜ் 'சுழலில்' கம்மின்ஸ் (50) சிக்கினார். நேதன் லயன (8), சேயர்ஸ் (0) ஏமாறறினர். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் பெய்ன் (62) கைகொடுத்தார்.

முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 221 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

ஹேசல் வுட் (1) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் பிலாண்டர், ரபாடா, மகராஜ் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**டி வில்லியர்ஸ் ஏமாற்றம்**

பின், தனது 2ஆவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு மார்க்ரம் (37) நல்ல ஆரம்பம் கொடுத்தார். அம்லா (16), டி வில்லியர்ஸ் (6) ஏமாற் றினர்.


இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தபோது, 2வது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி, 3 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்து, 401 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

களத்தில் டீன் எல்கர் (39), அணித் தலைவர் டு பிளசி (34) இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் கம்மின்ஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டியின் 4ஆம் நாளாட்டம் இன்றாகும்.

# கிறைஸ்ட்சேர்ச் டெஸ்ட்
## இங்கிலாந்து ஆதிக்கம்



நியூசிலாந்து அணிக்கு எதிரான கிறைஸ்ட் சேர்ச் டெஸ்டில் ஸ்டோன்மன், வின்ஸ் அரைச்சதம் அடிக்க, இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்துகிறது.

நியூசிலாந்து சென்றுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றிருந்த நிலையில், இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிறைஸ்ட்சேர்ச்சில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 307 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்ட முடிவில், நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை எடுத்திருந்தது.

வோட்லிங் (77), சௌதி (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில், சௌதி (50) அரைச்சதம் அடித்தார். அண்டர்சன் 'வேகத்தில்' வோட்லிங் (85) சிக்கினார். நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 278 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் பிரோட் 6, அண்டர்சன் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**வின்ஸ் அரைச்சதம்**

பின், தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு அலெஸ்டர் குக் (14) ஏமாற்றினார். ஸ்டோன்மன், வின்ஸ் இணைந்து பொறுப்புடன் செயற்பட்டனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். சௌதி பந்தில் ஸ்டோன்மன் (60) ஆட்டமிழந்தார். வின்ஸ 76 ஓட்டங்கள் எடுத்தார்.

நேற்றைய 3ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில், இங்கிலாந்து அணி 2 ஆவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இதன்மூலம் 7 விக்கெட்டுகள் கைவசமிருக்கும் நிலையில், 231 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

களத்தில் அணித் தலைவர் ரூட் (30), மலான் (19) இருந்தனர்.


# மரண அறிவித்தல்

திருமதி
## அன்னேசம் சின்னத்தம்பி



பிறப்பு 1934.02.28 | இறப்பு 2018.03.31

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் திருநகர் தெற்கு, விவேகானந்த நகர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்னேசம் கடந்த 31.03.2018 அன்று காலமானார்.

அன்னார் செட்டியார் என அழைக்கப்பட்ட அமரர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து, கமலம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கலாவதி (தர்மபுரம்), திலகவதி (இந்தியா), புனிதவதி (திருநகர்), விமலாவதி (திருநகர்), பத்மாவதி (மட்டக்களப்பு), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஜெயமலர் (குமரபுரம்), ரதிமலர் (குமரபுரம்), விஜயமலர் (இந்தியா) ஆகியோரின் சிறியதாயாரும் செல்வரட்ணம் (தர்மபுரம்), காலஞ்சென்ற அருந்தவநாதன், காலஞ்சென்ற புனிதா என்று அழைக்கப்பட்ட இராசதுரை லோகநாதன் (பிரான்ஸ்), பரமானந்தம் (மட்டக்களப்பு), பத்மாசினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வசந்தராணி (பிரான்ஸ்), வசந்தசசிகலா (பிரான்ஸ்), வசந்தன் (அமெரிக்கா), காலஞ்சென்ற முகுந்தன், வரதாம்பிகை (தர்மபுரம்), தெய்வேந்திரம் (லண்டன்), ஜீவேந்திரன் (விவேகானந்தநகர்), அருந்தவசெல்வி (இந்தியா), சசிகலா (இந்தியா), கணேசராஜன் (விவேகானந்தநகர்), கஜேந்திரன் (அவுஸ்திரேலியா), சுபாஜினி (திருநகர்), காலஞ்சென்ற குகன், சோமளன் (திருநகர்), சௌசிகா (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்), ஜெரூபன் (பிரான்ஸ்), விதுர்சன் (மட்டக்களப்பு), வினிதா (மட்டக்களப்பு), விதுசனா (மட்டக்களப்பு), சர்மில் (பிரான்ஸ்), சிபிசேக் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2018) திங்கட்கிழமை 22/1, பண்ட் ரோட், கணேசபுரத்தில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

22/1, பண்ட் றோட், கணேசபுரம். (C-2087) தகவல்:- குடும்பத்தினர் 077 387 2992 (மகேன)



ஈரவிழிகளுடன்
# 1ம் ஆண்டு நினைவஞ்சலி
## மந்திரி சிவா



மண்ணில் 1967-04.10 | விண்ணில் 2017-04.13

ஓராண்டு ஓர் நொடியாய் ஓடினாலும்
ஒவ்வொரு பொழுதுகளும்
உம் முகம் காண
துடிக்கிறது எம் இதயம்

இரவு பகல் என்றில்லாது
எமக்காக வாழ்ந்தவரே
வார்த்தைகள் இல்லை உம்
நினைவைக்கூற
என்றும் உம் அன்பை
தோற்கடிக்கும் மற்றொரு
அன்பை யாரும் எமக்குத்
தரப்போவதில்லைஉம்மைத் தவிர

கனவுகளில் நாம் கண்ட காட்சிகளை
நிஜமாக்கிய எம் தந்தையே - நீர்
வேண்டும் எம்மருகில்
மறைந்து போனாலும் மறந்து போகாத
அன்பைத் தந்து சென்றவரே - நாம்
தினமும் அஞ்சலி செலுத்துகின்றோம்
உமக்காக ...

வீரபத்திரர் கோவிலடி, நாவற்குழி, கைதடி. (3482) என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்

# புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக மீண்டும் பட்டியலிட்ட ஐரோ.ஒன்றியம்

## இலங்கை அரசின் இராஜதந்திரம் காரணமாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் இணைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் 20 அமைப்புக்களுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் கடந்த 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், ஆகியோரின் இராஜதந்திர முயற்சிகளின் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் முதல் முறையாக இணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## நிதி அமைச்சர் மயிலிட்டிக்கு விஜயம்


படங்கள்: மகாலிங்கம்)

(கரணவாய்)

நிதி அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை மயிலிட்டிக்கு விஜயம் மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடினர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் வருகை தந்த நிதி அமைச்சரை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ வரவேற்றார்.

இப் பிரதேசங்களில் இடம்பெறும் மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்களின் எதிர்கால தேவைகள் குறித்தும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவஸ்ரீ தெளிவாக எடுத்துக்கூறினார். அத்துடன் பொதுமக்கள் தரப்பிலும் தமது தேவைகள் குறித்தும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

சகல கருத்துக்களையும் மிகவும் சிரத்தையுடன் செவிமடுத்த நிதி அமைச்சர் பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்துதாம் உரிய கவனம் எடுப்பதாக உறுதியளித்தார்.(இ-10-60)


## ஒன்பதாம் ஆண்டு நினைவினில்



பிறப்பு
1980
10
12

இறப்பு
2009
04
02

இப் பூமியில் பிறந்து பூத்துக் குலுங்கிய அன்புப் பூக்கள்
இருவரும் இம் மண்ணில் உதிர்த்தனவே.
ஊரும் உலகும் போற்றி வாழ்த்த எம் அன்பு மலர்களே.
எம்மை விட்டுப் பிரிந்து ஒன்பது ஆண்டுகள் சென்றாலும்
மீண்டும் இம் மண்ணில் உதித்து எம்மோடு மீண்டும் வாழ
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
அமரர்களின் நினைவு 02.04.2018 இன்று திங்கட்கிழமை
உடையார்கட்டு வடக்கில் உள்ள அவர்களது இல்லத்தில்
நடைபெறும் எனத் தெரியப்படுத்துகின்றோம்.



பிறப்பு
1987
04
15

இறப்பு
2009
04
21

கிருஸ்ணராசா
கிருஸ்ணரூபன்

(3387)
என்றும் நினைவுடன்
க.கிருஸ்ணராசா குடும்பத்தினர்.
உடையார் கட்டு, வடக்கு.

கிருஸ்ணராசா
மயூதரன்


## இராசி பலன்

**மேடம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடல் நலம் சீராகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**இடபம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நாடி வரும் நாள்.

**கடகம்:** பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், சுப செலவுகள் கூடும் நாள்.

**சிம்மம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், கௌரவம், அந்தஸ்து உயரும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு, வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**கும்பம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி | | |
| சனி, செவ் | குரு | சந் | |

**02.04.2018**

பங்குனி 19, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு

துதியை பிற்பகல் 5.49 மணிவரை

சித்திரை காலை 6.43 மணிவரை

சுபநேரம் 12.11-1.41 மணிவரை

இராகுகாலம் 7.41-9.11 மணிவரை

மூன்றாம் பங்குனித் திங்கள்

வளவன்



அச்சுவேலி வளலாய் மண்திட்டியம்பதி ஞானவைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள், தமிழமுதக்குருமணி கந்த ஜெயராமக்குருக்கள் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

# சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2018 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சை எழுதுபவர்களுக்கான சமய தீட்சை வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும் மட்டக்களப்பில் மட்டக்களப்பு நாவற்குடா இந்துசமய கலாசார மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. எனவே சமய தீட்சை பெற்றுக் கொள்ளாத பரீட்சார்த்திகள் சமய தீட்சையினை பெற்றுக் கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி. குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதுவரை சமயதீட்சை பெறாது பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதுவதற்கு முன் வசதியாக சமய தீட்சை வழங்கும் கிரியைகளில் கலந்து சமயதீட்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தங்களுக்கு வசதியான இடத்திற்கு சென்று சமய தீட்சை பெற்றுக்கொள்ளலாம். சமயதீட்சை பெறுபவர்கள் ஆசாரசீலராக சமய கலாசார உடையுடன் தூய செம்பு ஒன்று கொண்டு வர வேண்டும். அத்துடன் தங்களால் இயன்றகுருதட்சணைகொண்டுவருக.

சமய தீட்சை பெற்றுக் கொண்டதற்கான மாதிரிப் படிவத்தினை நிரப்பி தீட்சா குரு தீட்சைக்கு பொறுப்பானவர் ஆகியோரின் ஒப்பமிடப்பட்ட உறுதிப்படுத்தலுடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். சமயதீட்சை பெற்றவர்களே பரீட்சை எழுதும் தகுதியைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்வுகள் 19, 20, 21, 22 - 04- 2018 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (இ-10)

## சித்திரைப் புத்தாண்டுப் பரிசாக

# மக்களின் பெருந்தொகை நிலத்தை விடுவிக்க யாழ்.கட்டளைத் தலைமையகம் நடவடிக்கை

## தர்சன ஹெட்டியாராச்சி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு வருகின்ற தமிழ் - சிங்கள புத்தாண்டு பரிசாக பெருந்தொகை நிலத்தை விடுவித்து கொடுக்கவுள்ளதாக இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கப் பிரதிநிதிகளை பலாலி தலைமையகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை சந்தித்து பேசியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை ஒட்டி பெருந்தொகை நிலத்தை விடுவித்து தருவதற்கு உரிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றோம். தேசிய பாதுகாப்பு, பொதுமக்களின் நலன் ஆகிய இரு அம்சங்களுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முன்னெடுப்புகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

நிலங்களை பிடித்து வைத்திருக்க வேண்டும் என்றெல்லாம் எமக்கு ஆசை கிடையாது. மக்களின் நிலம் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை. இருப்பினும் தேசிய பாதுகாப்பை முன்னிறுத்தியே நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அற்ற வகையில் நிலங்களை விடுவித்து கொடுப்பதற்கான அணுகுமுறைகளை கைக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வரணியில் வங்கிக் கிளை பொதுமக்கள் கோரிக்கை





(வரணி)

வரணிப்பிரதேசம் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் 13000 இற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற பரந்த நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசமாகும்.

இங்கு அடிப்படை வசதிகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு வருகின்ற போதிலும் மக்கள் தமது பணத்தினை சேமிப்பதற்கும் ஏனைய பணத்துடன் சம்பந்தப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கும் வங்கியொன்று காணப்படாமை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இம்மக்கள் தமது வங்கிச் சேவையைப் பெறுவதற்காக சுமார் 12 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கொடிகாமம், நெல்லியடி நகரங்களுக்கே செல்ல வேண்டியுள்ளது.

இதனால் மக்களின் நேரம் வீண்விரயமாவதோடு ஏனைய வேலைகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே வரணிப் பிரதேசத்தில் பொருத்தமான இடத்தில் வங்கிக் கிளையொன்றினை ஆரம்பிப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை (விடைகள்)

### வினாத்தாள் I

| | | | |
|---|---|---|---|
| 1- 3 | 11- 1 | 21- 2 | 31- 4 |
| 2- 3 | 12- 3 | 22- 2 | 32- 3 |
| 3- 1 | 13- 2 | 23- 2 | 33- 2 |
| 4- 3 | 14- 2 | 24- 2 | 34- - |
| 5- 1 | 15- 3 | 25- 3 | 35- 1 |
| 6- 3 | 16- 1 | 26- 3 | 36- 2 |
| 7- 2 | 17- 1 | 27- 1 | 37- 2 |
| 8- 2 | 18- 2 | 28- 2 | 38- 1 |
| 9- 3 | 19- 2 | 29- 3 | 39- 1 |
| 10- 2 | 20- 3 | 30- 1 | 40-3 |

### வினாத்தாள் II

1. கண்ட கண்ட
2. நாம்
3. குப்பை கூழங்கள்
4. சூழலை
5. திடசங்கற்பம் கொள்வோம்
6. செல்வமான
   1. கேள்வி சொற்கள்
2. நன்றன்று
   1. பொன்விழா
   2. நாத்திகன்

3. ஊரி
   1. அம்மா
   2. பறந்தன
   3. படித்தான்

1. ஒளி
2. கறை
3. உளவு
4. ஒளிர்ந்தது

1. ✓
2. ✗
3. ✓

# நாவலடிப்பிள்ளையார் வீதி எப்போது புனரமைக்கப்படும்



(யாழ்ப்பாணம்)

வரணி மாசேரியில் அமைந்துள்ள நாவலடிப்பிள்ளையார் வீதியானது மிகவும் மோசமான முறையில் சேதமடைந்துள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்டுள்ள இந்த வீதியானது சுமார் 3 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும். மழைக்காலங்களில் நீர் தேங்கி வீதிக்கு மேலாக ஒரு அடிக்கு வரை காணப்படும். அதுமட்டுமன்றி ஏற்றமும் இறக்கமுமாகவும் காணப்படுகின்றது. பல வருடங்களாக இவ் வீதி புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் முறையிட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

இவ்வீதி சேதமடைந்துள்ளமையால் வீதியில் பயணிக்கும் மாணவர்கள், வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் போன்றோர் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)



கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவை முன்னிட்டு நேற்றுக் காலை பாஷையூர் புனித அந்தோனியார் கோவிலில் பாரம்பரிய முறைப்படி நடசாரிப்பாடல்களுடன் கலைஞர்களும் மக்களும் உயிர்த்த ஆண்டவரை பவனியாக கொண்டு வந்தனர். (படங்கள் :- பாஷையூர் செய்தியாளர்)




யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பங்குனி குளிர்த்தி தேரோட்ட மஞ்சள் பாற்குட பவனி பெருவிழா நேற்றுக் காலை வெகுவிமரிசையாக இடம் பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 2217603,
021 5671532



## மணமகள் தேவை

1979 கேட்டை 8 செவ்வாய் 37 பாவம் நியூசிலாந்து சிற்றிசன் மணமகனிற்கு மணமகள் தேவை. சீதனம் தேவை இல்லை.

தொடர்புகளுக்கு: 077 818 5978, 075 011 1122



## விற்பனையாகிறது

**அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்**

முதன்மை நிலை - ஒன்று
(தரம் ஒன்று, இரண்டு வகுப்புக்களுக்கானது புதியபாடத்திட்டத்திற்கு அமைவாக)

மாணவர்களுக்கான
தேர்ச்சிக் கணிப்பீட்டுச் செயற்பாடுகள்

தேவையான பாடசாலைகள் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்

0776258778




விலை: 150/-



## பாராட்டி வாழ்த்துகிறோம்

Congratulations



திரு.சுந்தரலிங்கம் கஜேந்திரன்
முதுகல்விமாணி(MEd)

எமது பாடசாலை ஆசிரியர்களான
திரு.சுந்தரலிங்கம் கஜேந்திரன்,
திரு.சுந்தரலிங்கம் சுஜீவன் ஆகியோர்
28.03.2018 புதன்கிழமை
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி,
கல்வி இளமாணி பட்டத்தை
பெற்றமையையிட்டு உளமார வாழ்த்தி அவர்கள்
இருவரும் மேலும் பல பட்டங்களையும்
பதவிகளையும் பெற்று
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/மயிலணி சைவமகா வித்தியாலயம்



திரு.சுந்தரலிங்கம் சுஜீவன்
கல்வி இளமாணி(MEd)



## சித்திரைப் புது வருடத்தை முன்னிட்டு...

நாவலர் வீதியில் அமைந்துள்ள

# JAMUNA FURNITURE

வழங்கும்



## மாபெரும் மலிவு விற்பனை




39900/- இலிருந்து

- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு SOFA செற்றிகளுடனும் 7500/- பெறுமதியான Glass Coffee Table இலவசம்
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்
- 25000/- இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோகசேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Piyestra, Nilkamal, Phonix, Arpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.







**JAMUNA FURNITURE**
181, Navalar Road, Jaffna.
TP: 021 2221092, 0777574776

விடுமுறை நாட்களிலும்
(ஞாயிற்றுக்கிழமை)
எமது நிலையம் திறந்திருக்கும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

# மின் கம்பத்துடன் மோ.சைக்கிள் மோதுண்டு இளைஞன் உயிரிழப்பு

## புளியங்குளத்தில் பரிதாப சம்பவம்



(மல்லாவி)

புளியங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ -9 வீதியில் உள்ள புளியங்குளம் முத்து மாரியம்மன் கோவிலுக்கு அண்மையாக வீதியின் அருகே நின்ற மின் கம்பத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோதுண்டு விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவம் நடைபெற்றுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணிக்கும் 3 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடைபெற்றிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் ஏ-9. வீதியூடாக கிளிநொச்சி நோக்கி பயணித்த கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த சாந்தவேலு - றொகான் (வயது -22) என்ற இளைஞரே மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மின் கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில், சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற புளியங்குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட வைத்திசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளை மீட்டு புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15-250-281)




# கேரளக் கஞ்சாவுடன் இரு பெண்கள் கைது

## வவுனியாவில் சம்பவம்

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து மொனராகலைக்கு பயணித்த பேருந்தினை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு பயணப் பைகளில் வைக்கப்பட்டிருந்த 2 கிலோ கேரளக் கஞ்சாவுடன் 25 மற்றும் 26 வயதுகளையுடைய இரண்டு தென்பகுதியைச் சேர்ந்த பெண்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, குறித்த பேருந்தில் கேரளக் கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக பேருந்தினை தடுத்து நிறுத்தி சோதனைக்குட்படுத்திய போது 2 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளை மிகவும் நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு பயணப் பைகளில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த பயணப் பைகளின் உரிமையாளர்களான தென்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களையும் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய யப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இதே வேளை இவர்கள் மீது இவ்வாறான முறைப்பாடுகள் முன்னரும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-15-250-281)

# தென்னிலங்கை கட்சிகள் ஆட்சி அமைப்பதை தடுக்க கூட்டமைப்புக்கு த.தே.ம.மு. ஆதரவு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச சபையில் தென்னிலங்கை கட்சிகள் ஆட்சி அமைப்பதை தடுக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு அளிக்கும் என தெரிவித்துள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு மொத்தம் 26 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய தமிழ் கட்சிகள் 14 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஜேவிபி உள்ளிட்ட தென்னிலங்கை கட்சிகள் 12 உறுப்பினர்களையும் பெற்றுள்ளனர். தமிழ் கட்சிகளில் இலங்கை தமிழரசு கட்சி 8 ஆசனங்களையும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி 3 ஆசனங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி 3 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

இந்நிலையில், தென்னிலங்கை கட்சிகள் சார்பில் தெரிவாகிய சிங்கள உறுப்பினர்கள் 12 பேரும் வேறு வேறு கட்சியினராகினும் மகிந்த சார்பான கட்சியின் தலைமையில் வவுனியா வடக்கு பிரதேச சபையைக் கைப்பற்ற தயாராகி வருகின்றனர். இதனால் தமிழர் தரப்பின் 3 கட்சிகளும் இணைந்தால் மட்டுமே வவுனியா வடக்கு பிரதேச சபையை கைப்பற்ற முடியும். ஏதாவது 2 தமிழ் கட்சிகள் இணைந்தால் கூட ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


இந்நிலையில் இந்த ஆபத்தை உணர்ந்து வவுனியா வடக்கில் தென்னிலங்கை கட்சிகள் ஆட்சி அமைப்பதை தடுக்கும் பொருட்டும், தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்கும் பொருட்டும் அங்கு முன்னிலை பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு வழங்க முன்வந்துள்ளது. இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இது தொடர்பில் இன்னும் தனது உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை. அவர்களும் ஆதரவு வழங்கினால் மட்டுமே கூட்டமைப்பு ஆட்சி அமைக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு உபகரணங்கள் கைப்பற்று; ஒருவர் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட தருமபுரம் 8ஆம் யூனிட் ஆற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை சுற்றி வளைத்து 22 போத்தல் கசிப்புடன் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியதோடு, சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ன தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நடைபெற்றுள்ளது.



இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் 8 ஆம் யூனிட் ஆற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்து தடயப்பொருட்களை கைப்பற்றியுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளார். இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)




புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்மாச்சி பாரம்பரிய மற்றும் போசணை உணவு தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையம் மன்னார், முருங்கன் பகுதியில் கடந்த 28 ஆம் திகதி வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் சார்பாக கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜி.குணசீலனினால் நண்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.ஸ்ரீரங்கன் தலைமை தாங்கினார். குறித்த கட்டடம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் 7.7 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்டது.

# பொதுமக்களுக்கான அபிவிருத்தி உதவித்திட்டங்களை மே மாதத்தில் இருந்து செயற்படுத்துவேன்

## முல்லையில் அமைச்சர் மங்களசமரவீர தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் பிற்பகல் முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் சென்ற நிதி அமைச்சர் மங்கள சமரவீர பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை சந்தித்து சமூகபொருளாதாரவாழ்க்கையை கட்டியெழுப்புவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் சென்ற நிதி அமைச்சர் அங்கு மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான கடன் உதவிகள் வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார்.

யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகிய பொதுமக்களின் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கான பல்வேறுபட்ட உதவித் திட்டங்களை தனது அமைச்சினூடாக இந்த ஆண்டு மே மாதம் தொடக்கம் செயற்படுத்தவுள்ளதாக அவர் உறுதி அளித்துள்ளார்

மேலும், இந்த கலந்துரையாடல்களில் மத்திய வங்கி ஆளுநர், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம்

# 68 மில்லியன் ரூபா செலவில் கடந்தாண்டு 156 வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தாண்டில் முன்னெடுக்கப்பட்ட கிராமத்திற்த ஒரு வேலைத்திட்டம் என்ற அபிவிருத்தி 'வேலைத் திட்டத்தின் கீழ் 156 வேலைத் திட்டங்கள் 68 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்படி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதாவது, கடந்த 2014ம் ஆண்டிலே கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 55 வேலைத்திட்டங்கள் 23 மில்லியன் ரூபாவிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 21 வேலைத்திட்டங்கள் 9.50 மில்லியன் ரூபா செலவிலும் அதேபோல ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 29 வேலைத்திட்டங்கள் 13.50 மில்லியன் ரூபா செலவிலும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 25 வேல்லைத்திட்டங்கள் 10 மில்லியன் ரூபா செலவிலும் மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவில் 16 வேலைத் திட்டங்கள் 7.5 மில்லியன் ரூபா செலவிலும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 10 வேலைத்திட்டங்கள் 4.50 மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (2-315)




# முட்டாள்கள் தினத்தில் புகைப்பிடிப்பவர்களுக்கு பிறந்தநாள் கொண்டாடிய இளைஞர்கள்



(குருமன்காடு)

புகைப்பிடிப்பவர்களுக்கு வவுனியா மாவட்ட சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் முட்டாள்கள் தினத்தில் பிறந்தநாள் வாழ்த்து சொல்லும் விழிப்புணர்வு பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

சிந்தாமணி பிள்ளையார் ஆலய முன்றலில் ஆரம்பமாகிய பேரணி வவுனியா பழைய பஸ்நிலையம், கடை வீதி, இலுப்பையடியூடாக, புதிய பஸ்நிலையத்தை சென்றடைந்து பின்னர் குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் நிறைவடைந்தது.

இதன் போது இருசக்கர உழவு இயந்திரத்தில் பிறந்த நாள் கேக் வைக்கப்பட்டு அதனை தொடர்ந்து இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பேரணியாக பின் தொடர்ந்து வந்தார்கள். இதன் போது மக்களுக்கு புகைத்தல் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.(2-281)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தாண்டில் ஆறாயிரத்து 67 வேலைத் திட்டங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மத்திய அரசினால் கடந்தாண்டில் ஆயிரத்து 183 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதனூடாக ஆறாயிரத்து 67 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தினாலும் ஆழிப் பேரலை அனர்த்தத்தினாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009ம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குப்பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து பல்வேறு நிதியொதுக்கீடுகளின் கீழ் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மத்திய மற்றும் மாகாண அரசுகளின் நிதியொதுக்கீடுகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீடுகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியொதுக்கீடுகள் என்பவற்றின் மூலம் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த 2017ஆம் ஆண்டில் மத்திய அரசினால் ஆயிரத்து 813. 119 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதனூடாக ஆறாயிரத்து 767 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படடிருப்பதாக மாவட்டசெயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சினுடைய 415 வேலைத் திட்டங்களும் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினூடாக மூவாயிரத்து 445 வேலைத்திட்டங்களும்ஏனைய எட்டு வகையான ஒதுக்கீடுகள் மூலம் இவ்வாறான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்





(பனிக்கன்குளம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கான, சத்தியப்பிரமான நிகழ்வு நேற்று வவுனியா வாடி வீட்டில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் க.அருந்தவராஜா தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வின் போது, வவுனியா, மன்னார், முல்லைத்தீவில் ஆகிய மாவட்டங்க ளில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 25 உறுப்பினர்கள் சட்டத்தரணி முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதன்போது ஈபிஆர் எல்எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான இந்திரராசா, தியாகராஜா, தமிழர்விடுதலை கூட்டணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர், ஈழவர் ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தர் செந்தில் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# முகமாலையிலுள்ள உபதபாலகத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் உள்ள உபதபாலகம் இதுவரை ஆரம்பிக்கப்படாமையினால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளுக்கு யாழ்.தென்மராட்சி எழுதுமட்டுவாழ் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

முகமாலை பகுதியில் இயங்கி வந்த முகமாலை உபதபாலகம் கடந்த 2009ம் ஆண்டின் பின்னரான மீள்குடியமர்வின் பின்னர் இதுவரை இயங்காத நிலை காணப்படுகின்றது.

இதனால் இப்பகுதி மக்கள்தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பிரதேசத்திற்கே செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக முகமாலைப் பகுதியில் இருந்து சுமார் எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் முகமாலை உபதபாலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவு தொகையையும் பெற்றுக்கொள்வதற்கு அதிக பணம் செலவழித்து எழுதுமட்டுவாழ் செல்ல வேண்டியுள்ளது. எனவே குறித்த தபாலகத்தை உரிய இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# நாட்டார் கலை, கற்றல் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம்



(முல்லைத்தீவு)

நாட்டார் கலை, கற்றல் போட்டியில் அகில இலங்கை ரீதியில் ஜெயம் ஜெகன் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய இலக்கிய விழாவை முன்னிட்டு 2017-2018 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட நாட்டார் கலை, கற்றல் போட்டியில் முதலாமிடத்தையும் இலக்கிய விபரணத்தில் இரண்டாம் இடத்தையும் ஜெயம் ஜெகன் பெற்றுள்ளார்.

இவருக்கான விருது வழங்கும் நிகழ்வு உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்னவினால் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. (2)

# ஆட்டிசம் (Autism) பற்றி அவதானமாயிருங்கள்



சர்வதேச ஆட்டிசம் தினத்தை (ஏப்ரல் 2 ஆம் திகதி) முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

ஆட்டிசம் என்பது குழந்தைகளின் விருத்தியில் ஏற்படும் ஒரு பின்னடைவு ஆகும். சமூக நடத்தை மற்றும் தொடர்பாடலில் ஏற்படும் ஒரு பின்னடைவு இந்நோயின் சிறப்பியல்பு ஆகும். இக்குறைபாடு பிறப்பிலேயே உருவாகின்றது. எனினும் பிள்ளை வளரும் போதே குணங்குறிகள் வெளியே புலப்பட ஆரம்பிக்கும்.

இதனை முற்கூட்டியே கண்டறிவதன் மூலமும் தகுந்த பயிற்சிகள் கொடுப்பதனாலும் இந்நோயினால் பிற்காலத்தில் ஏற்படும் பல பின்னடைவுகளை தடுக்கலாம்.

### முற்கூட்டி கண்டறிவதற்கான அறிகுறிகள்:-

➢ 6 மாதகால அளவில் பிள்ளைவாய் விட்டு சிரிக்காதிருத்தல்.



➢ 9 மாத அளவில் முகம் பார்த்து சிரிக்காதிருத்தல் அல்லது ஒலி எழுப்பாதிருத்தல்.

➢ 12 மாத அளவில் மழலைச் சத்தங்களை எழுப்பாதிருத்தல்.

➢ 12 மாத அளவில் சுட்டிக் காட்டாதிருத்தல்.

➢ 16 மாத அளவில் சொற்களை சொல்லாதிருத்தல்.

➢ 2 வயதளவில் இரு சொற்களைச் சேர்த்து வசனம் கதைக்காதிருத்தல்.

➢ எந்த வயதிலும் எது விதமான பேச்சு, சமூதாய உணர்வு இல்லாதிருத்தல்.

### மேலதிகமாக காணப்படும் அறிகுறிகள்:-

❖ பெயர் கூப்பிடும் பொழுது கேட்காதது போலிருத்தல்.

❖ மற்றவர்களுடன் பழக விருப்பமில்லாது இருத்தல்

❖ பெரியவர்கள் செய்யும் செயற்பாடுகள் போல் செய்யாது இருத்தல். (Imitation)

❖ சாதாரணமாக ஒரு குழந்தை 2-3 வயதில் கற்பனை செய்து விளையாடுகிறது. ஆனால் ஆட்டிசம் உள்ள குழந்தை எதுவித கற்பனையும் இன்றி தாமாக தனியே விளையாடுவார்கள்.

❖ மற்றவர்களின் உணர்வுகள் அவர்கள் எதை சொல்ல வருகிறார்கள் என்பன பற்றி விளங்காதிருத்தல். மற்றவர்களின் சந்தோசம், கவலை பற்றி உணர்ந்து அதிக் பற்றாயிருத்தல்.

❖ தமது உணர்வுகளை (emotions ) கட்டுப்படுத்த தெரியாது இருத்தல். இதனால் தேவைக்கதிகமாக அழுதல், மற்றவர்களை அடித்தல், கடித்தல், தலையை அடித்து கொள்ளல், தலைமுடியை இழுத்தல், தன்னைத்தானே கடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

❖ மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடுதல் , ஒத்துப் போதல் போன்றகுணங்கள் அற்றிருத்தல். (Joint inattention)

❖ திரும்ப திரும்ப செய்யும் செயற்பாடுகள் (Repetitive behaviour )

✳ கையை கண்முன் வைத்து விளையாடுதல்.

✳ தன்னைத்தானே சுற்றுதல் மேலும் கீழும் அசைதல்.(Rocking)

✳ திரும்ப திரும்ப சில சொற்களை கூறுதல்.

✳ விளையாட்டு பொருட்களை சிறியதிலிருந்து பெரியது வரை அடுக்குதல்.

✳ தமது அன்றாட செயற்பாட்டில் மாற்றம் ஏற்படின் அளவுக்கு அதிகமாக கோபம் வருதல்.

✳ ஒருசெயற்பாட்டில் அதிக ஆர்வம் காட்டுதல்.

உ+ம் :-சிறியபிள்ளைகள் கூடுதலாக மின்னழுத்தியை மீண்டும் மீண்டும் போட்டு அணைப்பர். வளர்ந்த பிள்ளைகளாயின் கணக்கு திகதிகள் விஞ்ஞானம் உருவங்களில் அதிக ஆர்வம் காட்டுவர்.

❖ ஒலி, ஒளி, தொடுகை போன்ற வெவ்வேறு உணர்வுகளை கட்டுப்படுத்த இயலாதிருத்தல்.(sensory processing problems )



உ+ம் :- சாதாரண ஒலி எழுப்பும் சாதனங்களின் சத்தத்திற்கு காதை மூடுதல்.

### சிகிச்சைபடிமுறைகள்:

ஆட்டிசம் ஆயுட்காலம் முழுவதிலும் காணப்படுகின்ற நோயாயினும் பல்வேறுபட்ட பயிற்சி முறைகளினால் அவர்களின் ஆற்றல் மற்றும் திறனை அதிகரிக்க செய்யலாம். இதற்கான பயிற்சி முறைகளை சிறு பிராயத்தில் செய்வதனால் அதிக நன்மைகள் உண்டு. சிலருக்கு இப் பயிற்சிகள் வாழ்நாள் முழுவதும் தேவைப்படலாம்.

ஒவ்வொரு குழந்தைக்குமான பயிற்சி முறைகள் தனிப்பட்டவை. முற்கூட்டியே செய்யும் இப் பயிற்சி முறைகள் பிள்ளையின் நடத்தையை மாற்றுவதற்கான சிகிச்சை முறைகள் (behaviour intervertions) என்பன குழந்தையின் பெற்றோர்கள் பயிற்சி வழங்குவோரால் சேர்ந்து செய்யப்பட வேண்டியவை

### பயிற்சியின் போது கவனிக்க வேண்டியவை:-

❖ ஒரு கிழமையில் 25 மணிநேரமாவது திட்டமிட்ட ஒரு பயிற்சி கொடுக்க வேண்டும். (structured therapeutic actions )

❖ பயிற்சி கொடுப்பவர்கள் இதில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும்.

❖ ஒவ்வொரு குழந்தைக்கும் பயிற்சியின் இலக்குகளை முற்கூட்டியே வரையறை செய்யவேண்டும். இலக்குகளை சரியான நேரத்தில் குழந்தை சாதிக்கிறதா? என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

❖ பயிற்சியின் குறிக்கோள்கள் குழந்தையின் பேச்சு , விளையாட்டு, தினமும் செய்யும் செயற்பாடுகளை மையப்படுத்தி அமைக்க வேண்டும்.

❖ பயிற்சியில் பெற்றோரை முற்றுமுழுதாக ஈடுபடுத்தல் வேண்டும். பயிற்சி சம்பந்தமான முடிவுகளை பெற்றோருடன் கலந்தாலோசித்து செய்ய வேண்டும்.

❖ பயிற்சியை ஒருவர் அல்லது ஒரு குழுவாக மேற்கொள்ளல் வேண்டும். குழுவில் பேச்சுப் பழக்குபவர், விளையாட்டுப்பழக்குபவர் , குழந்தை மருத்துவர், பெற்றோர்கள் அங்கம் வகிக்க வேண்டும்

### சில சிகிச்சை படிமுறைகள்:-

▪ பிரயோக நடத்தை பகுப்பாய்வு (Applied behaviour Analysis)

நேர்மறை வலுவூட்டல் எனும்செயன்முறையை கையாளுதல் (Positive reinforcement) உ+ம்:- ஒருநடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் பிள்ளை அந்த நடத்தை மாற்றத்தை செய்யும் போது தட்டிக் கொடுக்க வேண்டும்.(reward)

▪ சாதாரணமாக ஒரு குழந்தை தானாக 12- 48 மாதங்களில் செய்யும் செயற்பாடுகளை ஆட்டிசம் உள்ள குழந்தைகளிற்குமேலதிக காலத்தை செலவு செய்ய விட்டு பழக்க வேண்டும். இதற்கு பெற்றோரின் ஈடுபாடும் கூடுதலாக தேவைப்படும்.

▪ பேச்சுமற்றும் மற்றவர்களுடன் பழகும் ஆற்றலை ஊக்குவிக்க விளையாட்டு போன்ற செயற்பாடுகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

▪ சிலவிடயங்களை திரும்ப திரும்ப கூறுவதால் நடத்தையில் மாற்றத்தை கொண்டுவரலாம்.

▪ பேச்சுத்திறனை மேம்படுத்துதல் சொற்கள் உச்சரிக்க கஷ்டமாக இருப்போருக்கு படங்களை காட்டி பேச்சுத்திறனை ஊக்குவிக்கலாம்.

▪ உணர்வு ஒருங்கிணைப்புச் சிகிச்சை (Sensory integration therapy)

அநேகமான ஆட்டிசம் நோய் உள்ள குழந்தைகள் தொடுகை, மணம், ஒலி ஒளி போன்றவற்றை உள்வாங்கி செயற்பட சிரமப்படுவர்.

உடற்தொழிற்பாட்டை கூட்டுவதன் மூலம் தசை, என்பு போன்றவற்றை ஒரு வகையில் அடக்கி மற்றைய புலன்களை பாவிக்க ஊக்குவிக்கலாம்.

உ+ம்:-ஊஞ்சல் ஆடுதல், சறுக்கியில் விளையாடுதல் மேற் கூறிய சிகிச்சை படிமுறைகளை செய்வதன் மூலம் ஆட்டிசம் நோயை கட்டுப்படுத்தலாம்.

தற்பொழுது இவ்வகையான பலாலி வீதியில் அமைந்துள்ள" மாதலம்" நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படுகிறது.




**கீதாஞ்சலி சத்தியதாஸ்**
குழந்தை வைத்திய நிபுணர்.
யாழ். போதனா வைத்தியசாலை.

# மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி ஆர்ட்டிலறி பிரிவை ஸ்தாபிக்க முயற்சி

## இராணுவத்தின் நடவடிக்கைக்கு எதிராக புன்னைக்குடாவில் முஸ்லிம்கள் களத்தில்



(புன்னைக்குடா)

ஏறாவூர் புன்னைக்குடா பிரதேசத்தில் பொது மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி இராணுவ ஆர்ட்டிலறி பிரிவை ஸ்தாபிப்பதற்காக எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தக்கோரி, பிரதமரின் கவனத்திற்கு மேற்படி விடயம் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸா ஹிர் மௌலானாவின் இணைப்பாளருமான ஏ.சி.எம். ஷயீட் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து நேற்று கருத்து தெரிவித்த அவர், ஏறாவூர் புன்னைக்குடா பிரதேசத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான சுமார் 25 ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி இராணுவ ஆர்ட்டிலறி பயிற்சி முகாம் அமைப்பதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டுள்ளதாக அக்காணிகளின் சொந்தக்காரர்கள் எமது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா மற்றும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சர்ச்சைக்குரிய இடத்திற்கு உடனடியாக வருகை தந்து நிலைமைகளைப் பார்வையிட்டதோடு இது குறித்து இராணுவ மற்றும் அரச உயர் மட்ட அதிகாரிகளிடமும் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

மேலும், இவ்விடயம் குறித்து கொழும்பு சென்று நேரடியாக பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்களிடம் உறுதியளித்தனர்.

குறித்த புன்னைக்குடா பிரதேசத்தில் காணி அபகரிப்பு இடம்பெறுவதாக கூறப்பட்டு வந்த பல்வேறு இனவாத சர்ச்சைகளின் அடிப்படையில் அப்பகுதியில் அரச காணிகளை அளந்து அடையாளமிடும் நடவடிக்கைகள் இடம்பெற்றதும் காணி அதிகாரி ஒருவர் சுடப்பட்டதான வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்ற வேளையில் தற்போது இவ்வாறு மீண்டும் பொதுமக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. உண்மையில் குறித்த காணிகளைச் சூழவுள்ள பகுதிகளில் அதிகளவான அரச காணிகள் இருக்கின்ற நிலையில் பொதுமக்களின் காணிகளை அபகரிக்க மறைமுகமாகவும் நேரடியாகவும் நடவடிக்கை எடுப்பது இனவாத தூண்டுதல்களாகவே நோக்க வேண்டியுள்ளது.

மேலும், தமிழ் முஸ்லிம் பொதுமக்கள் மிக அடர்த்தியாக வாழும் ஏறாவூர் நகரமும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் பொது மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி இராணுவ பயிற்சி மையங்களை நிறுவுவது பொருத்தமற்றதும் குழப்பமான நிலைமையுமாகும்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவுடன் இணைந்ததாக உள்ள ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் போதியளவு காணிகள் உள்ள அதேவேளை அருகில் வாழும் இந்த மக்கள் காணியற்றவர்களாக அந்தரிக்க விடப்பட்டிருப்பது ஒரு மனிதாபிமான நெருக்கடியாகவும் பார்க்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இது குறித்து உடனடியாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி ஜனாதிபதி, பிரதமருக்கு அறிவிக்கும் வகையில் உடனடியாக காணி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதேவேளை, சுமார் 3500 குடும்பங்கள் வசிப்பிடக் காணியற்றவர்களாக அவஸ்தைப்படுகின்ற நிலைமையில் இருக்கும் காணிகளையும் அபகரிக்க முயற்சிக்கும் இத்தகைய இனவாத நெருக்கடிகள் இன்னமும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதால் இப்பிரச்சினை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டு இராணுவம் கையகப்படுத்த உத்தேசித்திருக்கும் காணிகளில் பொதுமக்கள் மீண்டும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்"என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 39வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு அதிகார சபை நேற்று தனது 39 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் தலைமையில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அமைக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட மக்கள் பிரிவினருக்கு அரச அனுசரணையுடன் வீட்டு வசதிகளை வழங்குவதற்கு பதிலாக அனைத்து இலங்கை மக்களுக்கும் வாழக்கூடிய பொருத்தமான வீடுகளை வழங்குவதற்காக இந்த அதிகார சபை அமைக்கப்பட்டது.

இந்த அதிகாரசபை அமைக்கப்பட்டதையடுத்து 1979 ஆம் ஆண்டு முதலாவது, கம்முதாவ என்ற வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1979ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அதிகாரசபையினால் முடிந்தது.

2015 ஆம் ஆண்டு முதல் கடந்த 3 வருட காலப்பகுதியில் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ முன்னெடுத்த அனைவருக்கும் நிழல் என்ற தேசிய வேலைத் திட்டத்திற்கு அடிப்படையாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை விளங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் இதுவரையில் 610 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் 50 கிராமங்கள் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன. கடந்த 3 வருட காலப்பகுதியில் நாடு முழுவதிலும், சுமார் மூன்று இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை செய்து கொடுப்பதற்கு அதிகாரசபையினால் முடிந்துள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 39 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட முக்கிய வைபவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அநுராதபுரம்- பளுகஸ்வெள என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 31 ஆவது மாதிரிக் கிராமம் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. 39 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முதல் ஒரு வார காலத்திற்கு மத வழிபாட்டு நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. இந்த வார காலப்பகுதியில் இதுவரை காலம் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து கிராமிய மற்றும் நகர திட்டங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. 2020ஆம் ஆண்டளவில் நாடு முழுவதிலும் இரண்டாயிரத்து 500 கிராமங்களை அமைப்பதே அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் நோக்கமாகும்.

இது தொடர்பான உறுதிமொழியை நிறைவேற்றும் பொறுப்பை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஏற்றிருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் லக் விஜய சாகர பலன்சூரிய தெரிவித்துள்ளார். (இ)

## புதிய செயற்குழு

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய செயற்குழுவை தெரிவு செய்தது.

இதில் தலைவராக சொக்கலிங்கம் சிவயோகலிங்கம், செயலாளராக திருமதி கைலாசபதி நித்தியலட்சுமி, பொருளாளராக திருமதி. ஜெயகாந்தன் றாஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு நிர்வாக சபை உறுப்பினர்கள் 12 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.





கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித்த போகொல்லாகம இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தின் 11 உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த 36 உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வை.சலீம், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.சித்திரவேல், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் நா.திரவியம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ)

# பாரதம்

## பரோல் காலம் முடியும் முன்பே சிறைக்கு திரும்பினார் சசிகலா



(பெங்களூரு)

கணவரின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக பெங்களூரு சிறையில் இருந்து பரோலில் வந்த சசிகலா, பரோல் காலம் முடிவதற்கு முன்பாகவே நேற்று முன் தினம் சிறைக்கு திரும்பினார்.

சசிகலாவின் கணவரும், புதிய பார்வை ஆசிரியருமான நடராஜன் உடல் நலக் குறைவு ஏற்பட்ட தால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த 20ஆம் தேதி அதிகாலை 1.30 மணிக்கு இறந்தார். அவரது உடல் தஞ்சை அருளானந்த நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு இரவு 7.20 மணிக்கு கொண்டு வரப்பட்டது.

கணவர் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 15 நாள் பரோல் கேட்டு சிறை நிர்வாகத்திடம் விண்ணப்பித்தார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு 15 நாட்கள் பரோல் வழங்கப்பட்டது. அவரது உறவினரும் வக்கீ லுமான அசோகன் சொந்த பொறுப்பில் சசிகலாவை அழைத்து வந்தார்.

தஞ்சை வந்த அவர் கணவரின் இறுதி சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இதையடுத்து நடராஜன் வீட்டில் தங்கியிருந்த சசிகலாவை சீமான், வைகோ உள்பட முக்கிய பிரமுகர்கள் சந்தித்து ஆறுதல் கூறினர்.

சசிகலா 15 நாட்கள் பரோ லில் வந்தார். ஆனால் தற்போது 12 நாட்களே ஆன நிலையில் திடீரென அவர் இன்றே சிறைக்கு செல்ல முடிவு செய்தார். முன் கூட்டியே சிறைக்கு செல்வது குறித்து பல்வேறு கேள்விகளும், சந்தேகங்களும் எழுந்தன.

தஞ்சை பரிசுத்தம் நகரில் உள்ள நடராஜனுக்கு சொந்தமான வீட்டில் பரோல் நாட்களில் தங்கி இருந்த சசிகலாவிடம் நடராஜனின் சொத்துக்களை முறையாக பிரித்து தர வேண்டும் என அவரது உறவினர்கள் கேட்டதாகவும், இதற்கிடையில் தினகரனுக்கும், திவாகதல் ஏற்பட்டதாகவும். அதனை சசிகலாவால் தீர்த்து வைக்க முடியவில்லை என்பதாலும் அவர் முன்னதாக புறப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் சசிகலா நேற்று முன்தினம் காலை 8.50 மணிக்கு தஞ்சையில் இருந்து காரில் புறப்பட்டார். சசிகலாவுடன் எம்.எல்.ஏ பழனியப்பன், ரெங்கசாமி, செந்தில் பாலாஜி, தங்க தமிழ்செல்வன் உள்பட பலர் சென்றனர்.

மாலை 4 மணி யளவில் பெங்களூரு சென்ற டைந்த அவர் பரப்பன அக்ரஹாரா சிறைக்கு திரும்பினார்.

பரோல் காலம் முடியும் முன்பாகவே அவர் சிறைக்கு திரும்பியதன் மூலம் தண்டனை காலத்தில் இருந்து அவருக்கு சலுகைகள் கிடைக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (10)

## நியுட்டினோ திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ம.தி.மு.க. தொண்டர் மதுரையில் தீக்குளிப்பு



(மதுரை)

நியுட்ரினோ ஆய்வு மையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வைகோ நடைபயணம் தொடங்கிய மேடையின் அருகே ம.தி.மு.க. தொண்டர் ஒருவர் தீக்குளித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தேனி மாவட்டம், போடி அருகே உள்ள பொட்டிபுரம் மலைப்பகுதியில் நியுட்ரினோ ஆய்வு மையம் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மதுரையில் நேற்று முன்தினம் நடைபயணம் ஆரம்பித்தார். அவரது பயணத்தை தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், வைகோ. விழிப்புணர்வு நடைபயணம் தொடங்கிய மேடையின் அருகே ஒருவர் திடீரென தீக்குளித்தார். அவரது உடல் முழுவதும் பலத்த தீக் காயம் ஏற்பட்டுள்ளது. அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. (10)

## மேலாண்மை வாரியத்திற்கு அவகாச மத்திய அரசின் வாக்கு வேட்டை வி

### கமலஹாசன் சுட்டிக்காட்டு



(சென்னை)

காவிரி மேலாண்மை வாரியத்தினை அமைக்க மத்திய அரசு 3 மாதம் அவகாசம் கேட்பது அரசியல் விளையாட்டு என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும் நடிகருமான கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே நடிகர் கமல் ஹாசன் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசு 3 மாத காலம் அவகாசம் கேட்பது வாக்கு வேட்டைக்கான அரசியல் விளையாட்டு. இப்படித் திசை திருப்பப்படும் என்று ஏற்கனவே நான் தெரிவித்தவாறே நடந்து இருக்கிறது.

உயிரும், பயிரும் காலம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் காலதாமதம் செய்யாமல் அவர்கள் ஆவன செய்தே ஆகவேண்டும். அவர்களால் இயலும் என்பதே என் கருத்து. இது தனி மனிதன் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல, இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டது.

மற்ற மாநிலங்களில் நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு உள்ளது.

அரசியலுக்காக தடுத்துக் கொண்டு இருக்கின்றனர் அரசியல்வாதிகள். இதில் யார் பெயரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம். தங்களின் சுயநலத்திற்காக, கட்சியின் நலனுக்காக மக்கள் வாழ்வாதாரத்தை பற்றி கவலைப்படாமல் விளையாடிக்கொண்டு இருக்கிறார் கள்.

மெரினா கடற்கரையில் போராட்டம் நடத்தியவர்க ளைக் கைது செய்

## ஹொடைடா துறைமுகத்தில் தீ நிவாரணப் பொருட்கள் எரிந்



(ஏடன்)

ஏமனில்உள்ளஹொடைடா துறைமுகத்தில் நேற்று முன் தினம் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் அகதிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் நாசமடைந் துள்ளன.

ஏமன் நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரால் பல இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வசிப்பிடங்களை விட்டு குடிபெயர்ந்து அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதுமட்டுமின்றி, உள்நாட்டிலும் அகதிகள் முகாம்களில் இலட்சக்கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான உணவு, பால் பவுடர், உடைகள், மருந்துப் பொருட்களை வெளிநாட்டு அரசாங்கங்களும், தொண்டு நிறுவனங்களும் வழங்கி வருகின்றன.

செங்கடல் பகுதியில் அமைந்துள்ள ஹொடைடா துறைமுகத்துக்கு வந்துசேரும் இந்த நிவாரணப் பொருட்கள் அங்கிருந்து அகதிகள் முகாம்களுக்கு பிரித்து அனுப்பப்படுகிறன. சுமார் 2.2 கோடி மக்கள் வாழும் இந் நாட்டில் நான்கில்மூன்றுபேர்நிவாரணப் பொருட்களை நம்பி வாழ்ந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடு செய்துள்ளது.

இந்நிலையில், உள்நா ட்டு நேரப்படி நேற்று முன்தி னம் காலை சுமார் 11 மணி யளவில் ஹொடைடா துறை முகத்தில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. இதில் அகதிக ளுக்காக

## காஷ்மீரில் பதுங்கியிருந்த 7 தீவிரவாதிகள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொலை

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீரில் பதுங்கியிருந்த 7 தீவிர வாதிகள் பாதுகாப்புப்படை யி னரால் நேற்று ஞாயிற்றுக்கி ழமை சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் உள்ள டிரகாட் பகுதியில் தீவிர வாதிகள் சிலர் பதுங்கி இருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 7 தீவிரவாதிகளும் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து நேற்று காலை அப்பகுதியில் இராணுவத்தினரின் தேடுதல் நடவ டிக்கைகளில் ஈடுபட்ட வேளை அங்கு



# வெளிநாடு

## பகாசம் கேட்பது
## விளையாட்டு



தது அடக்கு முறை என்பதுடன், எதிர்ப்புக் குரலே வரக்கூடாது என அடக்கு முறை செய்ததால் அவ் விடயம் தீயாகப் பரவி விடும். மாணவர்களின் எழுச்சி என்பது அவர்களுடைய கோபம் மட்டுமல்ல.

மக்களின் கோபத்தை அவர்கள் பிரதிபலிக் கின்றனர். நானும் அப்படித் தான். இவ்வாறான போராட்டங்களை அடக்க அடக்க மேலும் அதிகரிக்கும்' என நடிகர் கமல்ஹாசன் மேலும் தெரிவித்தார். (10)

## போராட்டக் களத்தில் துப்பாக்கிச்சூடு; பாலஸ்தீனர்கள் 16 பேர் உயிரிழப்பு

(காசா)

காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பு சார்பில் நடத்தப் பட்ட போராட்டத்தை அடக்க இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் பாலஸ் தீனம் நாட்டை சேர்ந்த 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாலஸ்தீன - இஸ்ரேல் எல் லையில் ஹமாஸ் அமைப்பு சார்பில் பல்வேறு போராட்ட ங்கள் நடைபெற்று வருகி ன்றன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பத்தாயிரத்துக்கும் மேற் பட்டோர் அப்பகுதியில் திரண்டு இஸ்ரேல் அரசுக்கு எதிராக பேரணியில் ஈடுபட் டனர். அவர்களை இஸ்ரேல் இராணுவத்தினர் தடுக்க முயற்சித்தனர். போராட்டக் காரர்களை தடுக்கும் முயற்சி தோல்வி யடைந்ததால் இஸ்ரேல் இராணுத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.



அதைத் தொடர்ந்து பாலஸ் தீனர்கள் வசிப்பிடங்களை நோக்கி குண்டுவீசியும் தாக் குதல் நடத்தியதாக தெரி கிறது.

இந்தத் தாக்குதல் சம் பவங்களில் 16 பேர் உயி ரிழந்துள்ளதுடன் நூற்றுக் கும் மேற்பட்டோர் காய மடைந்தனர்.

அதைத் தொடர்ந்து அப் பகுதியில் பதற்றமான சூழ் நிலை நிலவி வருகிறது.

கலவரக்காரர் "களை கட்டுப்படுத்த இஸ் ரேல் இராணுவத்தினர் துப்பா க்கிச் சூடு நடத்தியதற்கு சர்வ தேச நாடுகள் கண்டனம் வெளி யிட்டுள்ளன. (10)

## ல் தீ விபத்து
## ரிந்து நாசம்



அனுப்பி வைக்கப் பட்ட நிவாரணப் பொருட் கள் நாசமடைந்துள்ளன. தீ விபத் திற்கான காரணங்கள் இது வரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

பதுங்கி இருந்த தீவிரவாதிகள் இராணு வத்தினரை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களுக் குப் பதிலடி கொடு க்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதைத் தொடர்ந்தே குறித்த தாக்குதலில் 7 தீவிரவாதி களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தினையடுத்து தொடர்ந் தும் அந்தப் பகுதிகளில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதிகளில் மேலும் தீவிரவாதிகள் பதுங்கி யிருக்கக்கூடும் என்பதால் தேடுதல் நட வடிக்கைகள் தொடர்ந்தும் முன் னெடுக் கப்பட்டு வருகின்றன. (10)

## மறைந்த விஞ்ஞானி ஸ்டீபனுக்கு லண்டனில் இறுதிச் சடங்கு

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மறைந்த இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக் கிங் இறுதிச்சடங்கு லண்ட னில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக் கிங். குவாண்டம் கோட் பாடு, அண்டவியல், கருந் துளை ஆராய்ச்சியில் அவரது பங்கு முக்கியமானது. பல் வேறு அறிவியல் மாநாட்டில் பங்கேற்று மக்களுக்கு அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

நரம்பியல் நோயால் உடலியக்கம் பாதிக்கப்பட்ட நிலையிலும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி தனது ஆராய்ச்சியை தொட ர்ந்தார். விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், கடந்த மார்ச் 14ஆம் திகதி அதிகாலை தனது 76-வது வயதில் கால மானார். லண்டன் கேம் பிரிட்ஜில் உள்ள வீட்டில் அவரது உயிர் பிரிந்தது.

இந்நிலையில், மறைந்த ஸ்டீபன் ஹாக்கிங்கின் இறு திச்சடங்கு நேற்று முன்தி னம் நடைபெற்றது. ஹாக்கிங் கின் உடல் தேவாலயத்தை அடைந்தவுடன், அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு ஆண்டையும் குறிக்கும் வகையில் 76 முறை மணி ஒலிக்கப்பட்டது. பிரபஞ்ச த்தை குறிக்கும் அல்லி மலர்கள் மற்றும் துருவ நட்சத்திரத்தை குறிக்கும் வெள்ளைநிற ரோஜாக்கள் ஹாக்கிங்கின் சவப்பெட்டி யின் மீது வைக்கப்பட்டிருந்தன.

ஸ்டீபன் ஹாக்கிங்கின் உடலை அவர் 50 ஆண்டுக ளுக்கு மேலாக ஆராய்ச்சியாள ராக இருந்த கோன்வில் மற்றும் காயஸ் கல்லூரியிலி ருந்து வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்திற்கு ஆறு சுமை தூக்குபவர்களால் எடுத்துச்செல்லப்பட்டது. ஸ்டீபன் ஹாக்கிங்கின் சவப் பெட்டியை அவரது குடும்பத்தி னர் சுமந்து சென்றனர். அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கானோர் கரவொலி எழுப்பி அஞ்சலி செலுத்தினர்.

வெஸ்ட்மின்ஸ்டர் அபே பகுதியிலுள்ள அறிவியலா ளர் ஐசக் நியூட்டனின் கல் லறைக்கு அருகே ஹாக்கிங் கின் சாம்பல் ஜூன் 15 ஆம் திகதி அடக்கம் செய்யப்படும். கடந்த 1727ஆம் ஆண்டு இறந்த சேர் ஐசாக் நியூட்டன் உடலும், அதற்குப் பின்னர் 1882இல் உயிரிழந்த சார்லஸ் டார்வின் உடலும் வெஸ்ட்மி னிஸ்டர் அபேயில் அடக்கம் செய்யப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கது. (10)

## நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் சீனாவின் ரேடார் தொழில்நுட்பம்

(பீஜிங்)

நவீன தொழில் நுட்பத் தைப் பயன்படுத்தி நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத் தும் புதிய ரேடார் சாதனம் ஒன்றை சீனா கண்டுபிடித் துள்ளது.

நுளம்புகளால் மனிதர் களுக்கு விதவிதமான நோய்த் தாக்குதல்கள் ஏற்படுகின் றன. இதனால்ஒவ்வொருஆண் டும் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. உலக சுகா தார அமைப்பின் புள்ளி விப ரப்படி ஆண்டுதோறும், சுமார் 10 இலட்சம் பேர் நுள ம்பால் பரவும் நோய்களால் உயிரிழக்கின்றனர்.

நவீன தொழில் நுட்பத் தைப் பயன்படுத்தி நுளம் புகளை ஒழிக்கும் புதிய ரேடார் சாதனம் ஒன்றை சீனா கண்டுபிடித்துள்ளது. ஏவுகணையில் பயன்படுத்தப் படும் முக்கிய தொழில்நுட் பத்தைப் பயன்படுத்தி இந்த ரேடார் உருவாக்கப்பட்டு ள்ளது.

பீஜிங் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி ஆராய்ச்சியா ளர்கள் இதனை உருவாக் கியுள்ளனர். இந்த ரேடா ரின் உதவியோடு, 2 கிலோ மீற்றர் சுற்றளவில் உள்ள நுளம்புகளை அறிந்து கொள்ள முடியும். ரேடாரில் இருந்து அதிவேகமாக மின்காந்த அலைகள்வெளியேறும்வகை யில் அந்தக் கருவி வடிவ மைக்கப்பட்டுள்ளது. அவை, அருகில் உள்ள நுளம்புகள் மீது பட்டுத் திரும்புவதன் மூலம் நுளம்பு குறித்த விப ரங்களை தெரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கருவியின் உதவி யால் அந்தக் குறிப்பிட்ட சுற் றளவில் உள்ள நுளம்புக ளின் பாலினம், அவற்றின் பறக்கும் வேகம் மற்றும் அளவு போன்றவற்றை தெரி ந்து கொள்ள முடியும். சம் பந்தப்பட்ட நுளம்பு சாப்பிட் டுள்ளதா அல்லது பசியோடு மனிதர்களைக் கடிக்க சுற் றிக் கொண்டிருக்கிறதா என் பது வரை இந்தக் கருவியின் மூலம் கண்டறியப்படும் என கூறப்படுகிறது. அதன்மூலம் நுளம்புகளின் அளவைத் தெரிந்து கொண்டு, அதற் கேற்ப ஒழிப்பு நடவடிக்கை யில் ஈடுபடமுடியும்.

மற்ற நாடுகளில் பறவை கள் மற்றும் பெரிய பூச்சி யினங்களின் நகர்வுகளைக் கண்காணிக்க, பொதுமக் களுக்கான ரேடார் அமைப் புகள் பயன்படுத்தப்படுகின் றன. ஆனால் உலகிலேயே முதன்முறையாகநுளம்புகளை கண்காணிக்க சீனா இரா ணுவ தொழில்நுட்பத்துடன் ரேடாரை தயாரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## நிலநடுக்கத்தையும் தாங்கும் சக்திவாய்ந்த சீனா ஹொங்கொங்கை இணைக்கும் பாலம்

(பீஜிங்)

சீனா ஈபிள் டவரை விட 60 மடங்கு அதிகமாக இரும்புக் கம்பிகளால் தரை மற்றும் கடலுக்கு அடியில் பாலம் கட்டி முடித்துள்ளது.

சீனாவானது பயண நேரத் தைக் குறைப்பதற்காக தென் சீன நகரங்களான சுகாய், மேகாவ் ஆகியவற்றையும் ஹொங் கொங்கையும் இணைக்கும் பாலத்தை சீனா கட்டி முடித்துள்ளது.

சீனாவின், ஹொங் கொங், மேகாவ், சுகாய் ஆகிய நகரங்களை இணை க்கும் விதத்தில் கடல் மீது 50 கிலோ மீற்றர் தூரத்திற்கு தரை மற்றும் கடலுக்கு அடி யில் சுரங்கப் பாலம் என இரு விதமாக பாலத்தை சீனா கட்டியுள்ளது. இதற்காக, கடல் நடுவில், 3 இலட்சம் சதுர மீற்றர் பரப்பளவில், பாறைகள் மற்றும் மண் ணால் நிரப்பப்பட்டு, இர ண்டு தீவுகள் உருவாக்கப் பட்டுள்ளன.

அந்த தீவில், 59 இரும் புத் தூண்கள் நடப்பட்டு பாலம் கட்டப்பட்டது. கடலுக்கு அடியில் 28 மீற்றர் ஆழத் தில் சுரங்கப்பாதை கள் அமைக்கப்பட்டுள்ளன. ரிக் டர் அளவுகோலில் 8 புள்ளி கள் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அத னைத் தாங்கும் வகையில் இந்தப் பாலம் கட்டப்பட்டுள் ளது.

சுமார் 6,720 கோடி ரூபாய் செலவில் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது, 50 கிலோ மீற்றர் நீள பாலத்தில், 6 கிலோ மீற்றர் தூரம், கட லுக்கு அடியில் சுரங்கம் அமை த்து உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

குறித்த பாலத்தின் திறப்பு விழா குறித்த தகவல்கள் இன்னும் அறிவிக்கப்பட வில்லை. பாலத்தை 120 ஆண்டுகளுக்குப் பயன்படு த்த முடியும் என்றும் பயண நேரம் பாதிக்கும் கீழாக குறைவதால் சீனாவின் வர்த்தகம் பெருகும் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

ஹொங்கொங் மக்களி டம் நற்பெயரை வாங்குவத ற்காகவும் தங்கள் மீது ஒரு பற்று ஏற்படுத்தவும் சீனா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (10)

## திட்டமிட்ட இலக்கை தகர்த்தெறியும் 'சர்மாட்' ஏவுகணைச் சோதனை வெற்றி

(மொஸ்கோ)

200 தொன் எடையுடன் அதி வேகமாக பாய்ந்து சென்று திட்டமிட்ட இலக்கினை தாக்கி அழிக்கும் அதிநவீன 'சர் மாட்' ஏவுகணையை ரஷ்யா வெற்றி கரமாக பரிசோதித்தது.

வல்லரசு நாடுகளான அமெ ரிக்கா, சீனா, ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு இணையாகவும், அவற்றை மிஞ்சும் வகையிலும் ரஷ்யா தனது ஆயுத பலத்தை தரம் உயர்த்தியும், அதிகரித்தும் வருகிறது.

இந்நிலையில், ரஷ்யாவி டம் முன்னர் இருந்த கண் டம்விட்டு பாய்ந்து தாக்கும் 'வோயுவோடா' ரக ஏவுகணை களுக்கு மேற்கத்தேய நாடுகள் 'சத்தான்' என்று அழைத்துவந்தன.

'சர்மாட்' என பெயரிடப் பட்டுள்ள இந்த ஏவுகணை களை மேம்படுத்தி, முன்னர் 'சாத் தான்' ஏவுகணை சுமந்து சென்ற போர் ஆயுதங்களை காட்டிலும் அதிகமான எடையை தாங்கிச் செல்லும் அதிக வீரிய மான ஏவுகணைகளை ரஷ்யா தற்போது தயாரித்துவருகிறது.

ஒவ்வொன்றும் சுமார் 200 தொன் எடையுள்ள இந்த ஏவு கணைகள் அனைத் தும் எதிரி நாடுகளின் ஏவு கணை தடுப்பு கேடயங்க ளின் கண் களில் மண்ணை தூவிவிட்டு திட்டமிட்ட இல க்கினை தாக்கி அழிக்கும் ஆற்றல் கொண்டவை.

பூமியின் தென்-துருவத் தில் இருந்து வடதுருவம் வரை இடைப்பட்ட தூரத்தில் உலகில் எந்த நாட்டில் உள்ள இலக்கையும், இந்த ஏவுக ணையால் தாக்கி அழித்து விட முடியும் என ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், 200 தொன் எடையுடன் அதிவேகமாக கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து செல்லும் அதிநவீன 'சர்மாட்' ஏவுகணையை ரஷ்யா பரிசோதித் தது.

வடமேற்கு ரஷ்யாவில் உள்ள பிலெசெட்ஸ்க் பகுதியில் உள்ள தளத்தில் இருந்து பரிசோதிக்கப் பட்ட இந்த ஏவுகணை நிர்ண யிக்கப் பட்ட இலக்கை வெற்றி கரமாக தாக்கி அழித்ததாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன. (10)

# தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த சார்க் நாடுகளின் மாநாடு கொழும்பில்

## ஜனாதிபதி மைத்திரி பங்கேற்பு



தொற்றாத நோய்கள் தொடர்பான சார்க் நாடுகளின் முதலாவது வருடாந்த மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆரம்பமானது. கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் நேற்று முன்தினம் காலை ஆரம்பமான இந்த நிகழ்வில் தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகள் குறித்தும் சார்க் நாடுகளுக்கிடையே அனுபவங்களை பரிமாறிக் கொள்ளுதல் தொடர்பாக இம்மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்டது. இம்மாநாடு நேற்றும் நடைபெற்றது.

மரபணு, உடல் மற்றும் சுற்றாடல் காரணிகளின் காரணமாக உருவாகும்நோய் நிலைமைகளான தொற்றாத நோய்களை குறைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் ஒவ்வொரு வருடமும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இவற்றில் இருதய நோய், புற்றுநோய், நீரிழிவு உள்ளிட்ட முக்கிய தொற்றாத நோய்களினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது குறைந்த மற்றும் மத்திய தர வருமானம் பெறும் நாடுகளாகும்.

உலகெங்கிலும் வருடாந்தம் சுமார் 10 மில்லியன் பேர் தொற்றாத நோய்களுக்கு ஆளாவதுடன், புகையிலை பாவனை, உடற் பயிற்சிகள் செய்யாமை, உணவில் கவனமில்லாமல் இருத்தல், போதைப் பொருள் பாவனை போன்றவை தொற்றாத நோய்கள் ஏற்பட பெரிதும் காரணமாக அமைகின்றன.

தொற்றாத நோய்கள் பேண்தகு அபிவிருத்தி இலக்கை வெற்றிகொள்வதற்கு தடையாக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அடையாளப்படுத்தியுள்ளது. அந்த வகையில் 2030ஆம் ஆண்டாகும் போது தொற்றாத நோய்களை கட்டுப்படுத்துவதற்காக திட்டமிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உலகெங்கிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியுள்ளதுடன், அவை ஏனைய நாடுகளுக்கும் முன்னுதாரணமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, பிரதி அமைச்சர் பைசால் காசிம், அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச மற்றும் சார்க் செயலகத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (இ)

# அதிகாரியை இடமாற்றம் செய்யக்கோரி உருவப்பொம்மை எரித்து ஆர்ப்பாட்டம்

(ஹற்றன்)

அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்ட அதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோரி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டவாறு இரண்டாவது நாளாகவும் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் 500இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தோட்டத்தில் உள்ள முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்



டொரிங்டன் தோட்டத்தில் உள்ள தொழிலாளி ஒருவரை கடந்த மாதம் தோட்ட நிர்வாகம் பணி இடை நிறுத்தம் செய்தது.

இவருக்கு தோட்ட அதிகாரி தொழில் தருவதாக பல முறை கூறி ஏமாற்றியதன் காரணமாகவே இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் உடனடியாக குறித்த தொழிலாளிக்கு தொழில் வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷங்களை எழுப்பினர். அத்தோடு தோட்ட அதிகாரியின் கொடும்பாவியும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரியூட்டப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் குறித்த தொழிலாளி மண்ணெண்ணை ஊற்றி தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார். எனினும் ஏனைய தொழிலாளர்கள் அவரை காப்பாற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பக்தர்கள், சுற்றுலா பயணிகளுக்குள்ள வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு வருகை தரும் பக்தர்கள், சுற்றுலா பயணிகளுக்குள்ள வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன:

இதற்கு அமைவாக முறையான நிர்வாக பொறிமுறை மற்றும் வழிகாட்டலுடனான புனித தலங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



அதிகாரம் கொண்ட வழிபாட்டு புனித அபிவிருத்தி மதிப்பீட்டுக்குழுக்கள் அநுராதபுரம், கதிர்காமம், சேருவில, மாத்தளை அலுவிஹாரை, மஹியங்கனை, களனி, கோட்டே, தெவிநுவர, முதியங்கன, திஸ்ஸ மகாராம ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன. (இ)

## இன்று ஒரு தகவல்

### நம் துன்பத்திற்குக் காரணமானவர்கள்

''அப்பா! அறுவை அண்ணாசாமி வந்திருக்காருப்பா'' என்று மகன் சொன்னதும் அப்பாவுக்கு முதல் கோபம் மகன் மீதுதான் வருகிறது. மகன் என்ன செய்வான் பாவம்!

''சார்! கார் ரிப்பேர் 3000 ரூபாய் ஆகுமாம்'' என்று சொன்னதும் அதன் உரிமையாளருக்கு டிரைவர் மீது தான் கோபம் வருகிறது. துன்பத்தின் பின்னணியும் களமும் வேறு. அவர்கள் தூதர்களே! எனவே அவர்கள் மீது பாய்ந்து பயன் இல்லை.

நம்மை மீறிய ஒரு சக்தி நம்மை ஆட்டிப் படைக்கிறது. நாம் தோன்ற வேண்டிய காட்சிகள், ஆடவேண்டிய ஆட்டங்கள் எல்லாம் முன்கூட்டியே நிர்ணயம் செய்யப்பட்டுவிட்டன. அந்தந்த நேரத்தில் ஒருவர் வந்து ''இங்கே வா! இந்தக் காட்சியில் இப்படி நடி'' என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் போகிறார். அந்தக் காட்சியில் நடிக்கப் பிடிக்காவிட்டால் அதை நாம் தண்டனையாக நினைக்கிறோம். இதற்கு, நடிக்கச் சொன்னவர் நிச்சயம் காரணமாக மாட்டார்.

தந்தித் துறை ஊழியர் ஒருவரின் மறைவுச் செய்தி ஒன்றைக் கொண்டு வருகிறார் என்றால், அவர் என்ன பாவம் செய்தார்? அவர் அவரது கடமையைச் செய்தார், அவ்வளவே.

ஒன்றை நம்புவோம். தீமையும் நன்மையும் பிறரால் மட்டும் வருவதில்லை. நாமும் அதற்குக் காரணம். நாம் வாழும் சூழ்நிலையும் காரணமாக அமைந்து விடுவதுண்டு. இந்த நினைப்பை நாம் மனத்தில் அழுத்தமாகப் பதிவு செய்து கொண்டால் பிறர் மீது நமக்குக் கோபம் வராது. அவர்கள் மீது வருத்தம் வராது. அடுத்த கட்டத்திற்குப் போய்க் குழி பறிக்கவும் அடிக்கவும் வெட்டவும் குத்தவும் முன் வருகிறார்களே அதற்கு அவசியம் ஏற்படாது.

செய்த தவறுக்குத் தண்டனை வழங்கும் நீதிபதி, நம் தண்டனைக்குக் காரணமானவரல்லர், தண்டனை என்பது அவர் வழியே கிடைக்கிறது; அவ்வளவே. நடைமுறை வாழ்க்கையிலும் இப்படித்தான்.

இதைப் புரிந்துகொள்ளாமல் கடைசியாக யார் மூலம் நமக்குத் தண்டனை வழங்கப்படுகிறதோ அவர்களே நம் துன்பத்திற்குக் காரணமானவர்கள் என்று தப்புக் கணக்குப் போடுகிறோம். இது ஒரு குழந்தைத் தனமான நினைப்பு.

இதை உடனே கைவிட வேண்டும்!

**லேனா தமிழ்வாணன்**

# இறப்பரை இறக்குமதி செய்ய ஸ்லோவாக்கியா தயார்



(கொழும்பு)

கார் உற்பத்தி கைத்தொழிலுக்காக தமது நாட்டிற்கு இலங்கையில் இருந்து இறப்பரை இறக்குமதி செய்யத் தயார் என ஸ்லோவாக்கியாவின் துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான பீற்றர் கசிமிர் தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீனுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இறப்பர் உற்பத்தியில் முன்னணியில் திகழும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கைக்கும் ஸ்லோவாக்கியாவிற்கும் இடையிலான வருடாந்த வணிகத்தின் பெறுமதி நான்கரைக் கோடி டொலரைத் தாண்டுகிறது. இதனை மென்மேலும் அதிகரிக்க ஸ்லோவாக்கியாவிற்கான இறப்பர் இறக்குமதி வழிவகுக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளை வலுவூட்டுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# படைகள் ஆக்கிரமித்துள்ள மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும்-வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஆகியோரின் பதவிக் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தின் வசம் உள்ள பொதுமக்களின் நிலங்கள் முழுமையாக விடுவித்து தரப்படும் என்று தாம் நம்புவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கீரிமலை நல்லிணக்கபுரம் வீட்டுத் திட்டத்தில் இரண்டாம் கட்டமாக 25 பயனாளிகளுக்கு இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தால் கடந்த வெள்ளிக்கிழமை வீடுகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண தமிழ் மக்களின் பிரச்சினைகளை உண்மையிலேயே தீர்த்து தர வேண்டும் என்பதில் இராணுவ தளபதி, யாழ். மாவட்ட கட்டளை தளபதி ஆகியோர் மிகுந்த அக்கறையுடனும், கரிசனையுடனும் உள்ளனர். இராணுவ தளபதியை பற்றி கூறுவதானால் அவர் யாழ். மாவட்ட கட்டளை தளபதியாக முன்பு கடமையாற்றியவர். அவருடைய அக் காலத்தில் தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தல், வழிகாட்டல் ஆகியவற்றுக்கு அமைய நல்லிணக்கபுரம் வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டது. அவர் எமது மக்களின் பிரச்சினைகளை மிக நன்றாகவே அறிந்தவர். அப்பிரச்சினைகளை உரிய முறையில் விரைவாக தீர்த்து தர வேண்டும் என்று விரும்புபவர்.

அதேபோல தற்போது யாழ். மாவட்ட கட்டளை தளபதியாக பதவி வகிக்கின்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி மிகவும் எளிமையானவர் மாத்திரம் அல்லர் பழகுவதற்கு இனிமையானவரும்கூட. எமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்து தர வேண்டும் என்பதில் அவரும் மிகுந்த பேரார்வம் காட்டி வருகின்றார்.

எனவே இவர்கள் இருவரினதும் காலத்தில்தான் எமது காணிகள் விடுவித்து தரப்படும். ஏனென்றால் இவர்கள் இருவரும் எமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்து தருகின்ற விடயங்களை சிறந்த முறையில் அணுகிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் நல்லிணக்கபுரம் வீட்டுத்திட்டத்தில் இரண்டாம் கட்டமாக 25 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்படுகின்ற வைபவத்தில் இருவரும் பங்கேற்று இருப்பது மகிழ்ச்சி தருகின்றது. மேலும் நல்லிணக்கபுரம் வீட்டுத்திட்டமாக இருந்தாலும் சரி வேறு எந்த திட்டமாக இருந்தாலும் சரி இராணுவத்தின் பங்களிப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் தான் அதை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிகின்றது. என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சகிப்புத் தன்மையும் விட்டுக்கொடுப்பும் அவசியம்

## டக்ளஸ் எம்.பி.அறிவுரை

(கொழும்பு)

பழைய முரண்பாடுகளை தொடர்ந்தும் நாம் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவ்வாறு அதை தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டிருப்பதால் பாதிக்கப்படுவது எமது மக்களே. ஆகவே நாம் முரண்பாடுகளுக்குள் உடன்பாடு கண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாட்டில் நடந்த அழிவு யுத்தத்தினால் மூன்று தசாப்த காலத்தை தொலைத்து விட்டு அவலங்களை சுமந்து வாழும் எமது மக்களை பொருத்தமற்ற திசைவழி நோக்கி வழிநடத்துவதும் அர்த்தமற்ற உசுப்பேற்றல்களை பேசுவதும் மீண்டும் அவர்களை பின்நோக்கித் தள்ளுவதாகவே அமையும்.

ஆகவேதான் நாம் புதிய சிந்தனை வழியில் நிதானத்தோடும் சகிப்புத் தன்மையோடும் சிந்திக்கின்றோம்.

அந்தவகையில் எதிர்கால செயற்பாடுகள் எப்படி அமையும் என்று இன்றைய நிலைமைகளோடு எதிர்வுகூற விரும்பவில்லை. அது அக்கால சூழலையும் அரசியல் கள நிலைமையையும் கொண்டு தான் அமையும்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் எமது மக்களின் மீள் எழுச்சிக்காகவும் மக்களின் சிறந்த ஒளிமயமான எதிர்காலத்திற்காகவும் விட்டுக்கொடுப்போடும் சகிப்புத் தன்மையுடனும் எமக்கு முன்னால் உள்ள அரசியல் சவால்களை சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# ரணிலுக்கு எதிராக செயற்படுவோர் அரசில் இருக்கத் தகுதியற்றவர்கள்

## அமைச்சர் விஜித் விஜிதமுனி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது அதற்குச் சார்பாக வாக்களிக்கும் எந்த ஒருவரும் அரசாங்கத்தில் இருக்கத் தகுதியற்றவர்கள் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் விஜித் விஜிமுனி சொய்ஷா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்கவுள்ளதாகவும், ஜனாதிபதியும் இதே கருத்தில் காணப்படுவதாகவும் ஸ்ரீ ல.சு.க.யின் அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 20 வீடுகள் கொண்ட லயக்குடியிருப்பில் தீ



(லிந்துலை)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லோகி தோட்ட கூமூட் பிரிவு தோட்ட குடியிருப்பில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 20 வீடுகள் கொண்ட தொடர் லயக் குடியிருப்பில் ஒரு வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

இந்த வீட்டில் இருந்த 5 பேர் தற்காலிகமாக அயலவர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டில் தாயும், மகனும் இருந்ததாகவும் எனினும் அயலவர்கள் ஓடி வந்து அவர்களை காப்பாற்றியதுடன், ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், துணிகள் எனப் பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன. (இ)

# மைத்திரி-ரணில் தலைமையில் மக்கள் விரோத ஆட்சி!

## மே தினத்தை மாற்றுவதற்கு லெனினிசக் கட்சி கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

எட்டு மணி நேர வேலை கோரிப் போராடிய அமெரிக்காவின் சிக்காக்கோ தொழிலாளர்களின் இரத்தத்திலும் உயிர்த் தியாகத்திலும் உதித்ததே உலகத் தொழிலாளர்களின் சர்வதேசப் போராட்டத் தினமான மே தினமாகும். போராட்டத்தில் பிறந்து மீண்டும் உலகத் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் போராட்ட உத்வேகம் அளித்து வரும் மேதினத் திற்கான முதலாம் திகதியினை மறுப்பதற்கோ, மாற்றுவதற்கோ அல்லது தடுப்பதற்கோ முதலாளிய ஆட்சியினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

மைத்திரி - ரணில் தலைமையிலான மக்கள் விரோத ஆட்சியானது மேதினத்தை முதலாம் திகதிக்குப் பதிலாக மே ஏழாம் திகதியில் நடத்த வேண்டும் என எடுத்துள்ள முடிவு தொழிலாளர் விரோத முடிவேயாகும். இதனை நாட்டின் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் அவர்களது கட்சிகளும் தொழிற்சங்கங்களும் நிராகரித்து எதிர்ப்பது அவசியமாகும். எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியும் ஆட்சியினரது மேற்படி முடிவை மிக வன்மையாக கண்டித்து எதிர்க்கிறது. அதேவேளை மே முதலாம் திகதியே மேதினத்தை நடத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மேதினத் திகதி மாற்றம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் கொலனிய காலத்திலிருந்தே தொழிலாளர் இயக்கங்கள் தோன்றி வளர்ந்து வந்த சூழலிலே பல்வேறு அடக்கு முறைகளுக்கு மத்தியில் மேதினம் சர்வதேசப் போராட்டத் தினமாக நினைவு கூரப்பட்டு வந்திருக்கிறது. 1956ஆம் ஆண்டுக்குப் பின்பே மேதினம் பொது விடுமுறைத் தினமாக்கப்பட்டது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த காலங்களில் பௌத்த தினங்களான வெசாக் தினங்களை சாட்டாக வைத்து மேதினங்களைத் தடுப்பதிலும் பொலிஸ் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதிலும் முன்னின்று வந்துள்ளது. அவற்றுக்கு எதிராகத் தொழிலாளர்களும் இடதுசாரிக் கட்சிகளும் போராடி வந்துள்ளன. அதன் வழியிலேயே இன்றைய மைத்திரி-ரணில் தலைமையிலான கூட்டு ஆட்சியானது தொழிலாளர்களின் மேதினத்தை அதற்குரிய நாளில் இருந்து ஏழாம் திகதிக்கு மாற்றியுள்ளது. இத்தகைய தொழிலாளர் விரோத முடிவின் மூலம் மேதினத்தின் முக்கியத்துவத்தை நிராகரித்து முதலாளிய வர்க்க சக்திகளை மனம் குளிர வைத்தும் உள்ளது.

எனவே நாட்டின் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளுடன் ஐக்கியப்பட்டு எதிர்வரும் மேதினத்தை மே முதலாம் திகதியில் நடத்துவதற்குத் தயாராக வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்துகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பேய்வடிவை வேண்டிப் பெற்ற பெருமாட்டி காரைக்கால் அம்மையாரின் குருபூசை இன்று

சோழவள நாட்டில் கடற்றுறைப் பட்டினமாக விளங்கிய காரைக்கால் என்னும் பதியில் வணிகர் குலத்தில் தனதத்தன் என்பானுக்கு அரும்பெறற் புதல்வியாய்த்தோன்றி திருமகள் போன்ற பேரழகோடு திகழ்ந்த புனிதவதி என்ற பெண்தான் பேய்வடிவை வேண்டி பெற்ற பெருமாட்டி ஆகும்.

வணக்கத்துக்குரியவரும் திருமுறைதந்த செல்வியுமான காரைக்கால் அம்மையார்தான் இத்தகைய பெருமைக்குரியவராகும். இருமுதுகுரவர் இசைவினால் பரமதத்தன் என்ற வணிகனுக்கும் புனிதவதியார்க்கும் திருமணம் நிகழ்ந்து மனையறம் நடத்தவும், வாணிபம் பெருக்கவும் காரைக்காலிலேயே வகை செய்து கொடுத்தான் தனதத்தன். மாமனார் அமைத்துத் தந்த வாணிபத்தைப் பரமதத்தன் பெருக்கிவர, புனிதவதியாரோ மனைத்தக்க மாண்புடன் இல்லறம் இயற்றியதோடு சிவபெருமான் மீது கொண்ட பக்தியிலும் மேம்பட்டுச்சிவனடியார்களுக்குத் திருஅமுதளித்தல் வேண்டும் பொருட்களை அவ்வப்போது கொடுத்தல் முதலான சிவபுண்ணியங்களிலும் சிறந்து விளங்கினார்.

இவர் வாழ்வினும் இன்னல் விளைந்தது ஓர் மாங்கனியால். கணவனைக்காண வந்தவர் கொடுத்த மாங்கனியை வீட்டுக் கொடுக்க அந்தக் கனியில் ஒன்றை துறவியொருவருக்கு மனைவி வழங்க உணவருந்த வந்த கணவன் கனியைக்கேட்க மீதியாக இருந்த மாங்கனியை அருந்தக் கொடுக்க அதன் சுவையில் மயங்கிய கணவன் மறுகனியைக் கேட்க துறவிக்குக் கொடுத்ததைக் கூறாது இறைவனை வேண்டி கேட்க இறைவன் அளித்த மாங்கனியைக் கணவனுக்குக் கொடுத்தது எல்லாம் நீங்கள் அறிந்த கதை.



உண்மை உணர்ந்த கணவன் பரமதத்தன் மனைவியைத் துறந்து வேறு பெண்ணை மணக்க இருவரையும் இணைத்து வைக்க உறவினர் முயன்றபோதுதான் இவர் திருவடிகளில் கணவன் வீழ்ந்து வணங்கிய காட்சியை உறவினர்கள் கண்டு உண்மையை அறிந்தார்கள். அந்த நிகழ்வுதான் பேய்வடிவம் பெறக் காரணமாக அமைந்துவிட்டது. அதைப் பின்வருமாறு பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் "திருநின்ற சருக்கம்" என்ற பதிகத்தில் பாடுகிறார்

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது இனி இவனுக்காகத்

தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி கழித்துஇங்கு உன்பால்

ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்

பாங்குற வேண்டும் என்று பரமர்தாள்பரவி நின்றார்."

சிவபெருமான் திருவடித் தொண்டு பூண்டு வாழ்ந்த புனிதவதியின் வேண்டுகோளை ஏற்ற சிவன் கொடுத்த பேரருளினாலே

"ஊனுடை வனப்பை எல்லாம் உதறிஎற் புடம்பேயாகி

வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார்"



இறைவனால் "அம்மையே வருக" என்று அழைக்கப்பெற்றவர். எம்பெருமான் உறையும் கயிலை மலையைக் காலால் மிதித்தல் கூடாது என்று தலையால் நடந்தவர். "நீ நம்பால் பெறக் கருதுவது யாது?" என இறைவன் கேட்க அம்மையார் இறைவா "நீ திருநடம் புரியும் போது உன் அடி நிழற்கீழ் இருக்க" என்று வேண்டிப்பெற்றவர்.

திருஞானசம்பந்தரும் சுந்தரரும் அம்மையார் தலையால் நடந்த திருவலாங்காட்டைக் காலால் மிதித்தல் கூடாதென ஊர் எல்லையிலிருந்தே திருப்பதிகங்கள் அருளியுள்ளனர்.

இத்தகைய பெருமைக்குரிய அன்னையாரின் குருபூசை இன்றாகும். நாயன்மார் பேரில் மடம் அமைத்து அன்னம் பாலித்ததால் "நாயன்மார்கட்டு" என்ற பேர்பெற்ற திருவூரிலே சிதிலமடைந்த மடம் புனருத்தாரணம் செய்யப்பெற்று நால்வர் சிலைகளும் சிவலிங்கமும் பிரதிட்டை செய்யப்பெற்றன.

நால்வர் குடமுழுக்கு நிகழ்ச்சியில் அறுபத்துமூவர் முதலிகளின் அகத்தியர் தேவாரத்திரட்டு வெளியிட்டு வைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இந் நாயன்மார் குருபூசை மடத்தில் முதலாவது குருபூசை நிகழ்வாகக் காரைக்கால் அம்மையார் குருபூசை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. அன்றைய தினம் "காரைக்கால் அம்மையார் புர்ாணம்" படிக்கப்பெற்றுக் கஞ்சி வார்ப்பும் இடம்பெற இருக்கின்றது. "அம்மையார் அடியினையைத் துதித்துப் புராணங்களைப் படித்து பேரின்பப் பெருவாழ் வடைவோமாக."

நாயன்மார் குருபூசைமடம்
நாயன்மார்கட்டு

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 11

**பரமசாமி பஞ்சாட்சரம்**

வாதவூரார் பல தலங்களை தரிசித்துப் பல அற்புதங்களைச் செய்து, திருவாசகம், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, திருச்சிற்றம்பலக் கோவை போன்ற 76 பதிகங்களை 1058 பாடல்களிற் பாடினார். அந்தணராக வந்த சிவபெருமான் திருவாசகம், திருக்கோவையார் பாடல்கள் முழுவதையும் தன் கையால் எழுதி ''திருவாதவூரான் சொல்லச் சிற்றம்பலத்தான் எழுதியது'' எனக் கையெப்பமும் இட்டார். இந்த ஏட்டினைத் திருவாதவூரர் கனகசபை வாசலில் இருந்து எடுத்து அந்தணர்களிடம் கொடுத்துப் கருவறையினுட் சென்று மறைந்து இறைவனோடு ஐக்கியமானார்.

இவரை மாணிக்கவாசக சுவாமிகள் என மக்கள் அழைக்கின்றனர். இவருடைய 8 ஆம் திருமுறையில் கயிலைக் கீர்த்தித் திரு அகவல் கடைசி ஒன்பது வரிகளை அடுத்த பக்கத்திலே பார்க்கலாம்.

'' பதஞ்சலிக் கருளிய பரமநா டகஎன்

றி த ஞ் ச லி ர் பெய்தநின் றேங்கினர் ஏங்கவும்

எழில்பெறும் இமயத் தியல்புடையம் பொற்

பொலிதரு புலியூர்ப் பொது வினில் நடநவில்

கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்

கருளிய திருமுகத் தழுகுறு சிறு நகை

இறைவன் ஈண்டிய அடியவரோடும்

பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்

ஒலி தரு கைலை உயர் கிழ வோனே''

திருமூலர் பத்தாம் திருமுறையில் (முதல் தந்திரம்- 1 சிவபரத்துவம் அத்தியாயம்) கயிலையைப் பற்றிப் பாடியுள்ளார் சேக்கிழார். அதிகாலையில் கயிலாசமலை சூரிய ஒளியில் பொன் நிறமாகப் பொலிவுடன் காணப்படுவதைச் சேக்கிழார் பெருமான் திருமுறையிலேயே பாடியுள்ளனர்.

''பொன்னின் வெண் திரு நீறு புனைந்தெனப்

பன்னும் நீள்பனி மால் வரைப் பாலது''

என்று சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலாச மலையாது பொன்னின் மீது வெண்மையான திருநீற்றை அணிந்தது போல இருக்கிறது என்கிறார். கயிலாசமலை அதிகாலையில் பொன் நிறத் தோற்றத்துடன் பொலிந்து காணப்படுவதால் இமயமலைக்கு அதிபதியாக இருப்பது கயிலையங்கிரி என்று திருமுறையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. சேக்கிழார் பெரிய புராணத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் கயிலாச மலையைப் பற்றிப் பாடி நிறைவு செய்துள்ளார்.



பெருமிழலைக் குறும்ப நாயனார் பெற்றபேறு

பெருமிழலைக் குறும்பனார் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குருவாக வணங்கி வந்தவராவர். சுந்தரருக்குத் தான் கயிலை செல்லும் நாள் எப்போது என்று தெரியாது. ஆனால் பெருமிழலைக் குறும்பநார் தன் யோகசித்தியால் சுந்தரர் எப்போது கயிலை செல்கிறார் என்பதை உணர்ந்தார். தன் குருநாதரைப் பிரிந்திருக்க ஆற்றாது " குருநாதர் நாளை கயிலை சென்றுவிட்டால் நான் ஒளி இழந்த குருடனாவேன். என் அக வாழ்வு இருண்டு விடும். எனவே யோக நெறியில் இன்றைக்கே சிவனின் தாளை நண்ணுவேன்" என்று அவர் சிவனை நினைத்து கீழ் வரும் தேவாரத்தை பாடினார்.

நாலுகரணங்களும் ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு

காலும்பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலகடு

ஏல வேமுன் பயின்ற நெறி எடுத்த மறைமூலந் திறப்ப

மூல முதல்வர் திரு ப்பாதம் அணைவார் கயிலைமுன் அணைந்தார்.

குறும்ப நாயனாரின் பக்தியை மெச்சிய சிவன் அருள்கூர்ந்து சுந்தரர் திருக் கைலாயத்திற்கு வருவதற்கு முதல் நாளே பெருமிழலைக்குறும்ப நாயனாரைக் கயிலை அடையத் திருவருள் பாலித்து ஆட்கொண்டார். இவர் சுந்தரருக்கு முதல் நாளே கயிலை சென்று இறைவன் அடி சேர்ந்த திருநாள் ஆடித் திங்கள் சுவாதி ஆகும்.

கயிலை தவம் இருந்து வரம் பெற்றவர்கள் மகா விஷ்ணு, இராவணன், அர்ச்சுனன், ஸ்ரீ ஆதி சங்கரர்.

மகாவிஷ்ணுவின் தவம்

மகா விஷ்ணு சிவபெருமானை நோக்கிக் கயிலாயத்திற்குத் தெற்கே வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையில் தவம் இருந்தார் என்று இராமாயணமும் நாரதர் புராணமும் கூறுகின்றன.

ஒரு முறை பிரம்மாவிற்கும் விஷ்ணு விற்கும் யார் பெரியவர் என்ற போட்டி வந்த போது சிவனிடம் முறையிட்டார்கள்.

(தொடரும்)

40TH ANNIVERSARY OF JAFFNA MEDICAL FACULTY

யாழ் மருத்துவபீடத்தின் 40ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து யாழ் மருத்துவபீடம் நடாத்தும்

"மாபெரும் மருத்துவக்கண்காட்சி"

YARL

MED EX - 2018

"health towards new horizon"

இடம் : யாழ் மருத்துவபீடம்

திகதி : 4 முதல் 7 சித்திரை 2018 வரை

நேரம் : காலை 9.00 - மாலை 7.00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Evolution Events and Corporate Services

KAMAL

(இ)


facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1374

Search for people, places and things Nagendram Home

## ராகுலன்

வாழ்க்கையில் சந்தர்ப்பம் அனைவருக்கும் அமைகின்றது



ஆனால் அதைப் பயன்படுத்துபவர்கள்தான் அரிது

## ராகவ்


வாழ்ந்து உயர்ந்துவிட்டால் பொறாமையில் பேசுவார்கள்



தாழ்ந்து வீழ்ந்துவிட்டால் கேவலமாகப் பேசுவார் கள்... இவ்வளவுதான் மனித சமூகம்...

## ராம்

மரத்தின் உட்பக்கமாக காகம் கூடு கட்டினால் பெருமழை பெய்யும்



வெளிப்பக்கமாகக் கட்டினால் அதிக மழை பெய்யாது. நம்முன்னோரின் மழைக்கணிப்பு மகத்துவம்

## ஆராதனா

நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணாதீர்கள்...!



நம்மைப் பற்றி நமக்குத் தெரியாதவற்றையா மற்றவர்கள் அறிந்துவிடப் போகிறார்கள்...!

## ஆரோகி

துன்பம் அனுபவித்த காலங்களை மறந்துவிடு



ஆனால் அது கற்றுத் தந்த பாடங்களை மறந்து விடாதே...!

## ஆஷிதா

காலில் செருப்பில்லை... காப்பாற்ற யாரும் இல்லை...



மாற்றி உடுக்க உடை இல்லை. ஆனாலும் இருக்கிறது யாரிடமும் கையேந்தி வாழக்கூடாது என்ற தன்னம்பிக்கை...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞானக் கல்விப் பிரிவுகளில் மாணவர்கள் எண்ணிக்கையும் தரமும் உயர்த்தப்பட வேண்டும்

க.பொ.த. (சா/த) பரீட்சை 2017 பெறுபேறகள் வந்துவிட்டன. இம்முறை பெறுபேறுகள் கடந்த வருடம் (2016) பெறுபேறுகளிலும் பார்க்க முன்னேற்றம் கண்டுள்ளது. தேசிய ரீதியில் க.பொ.த (சா/த) பரீட்சை எடுத்த பரீட்சாத்திகளில் 73.5 வீதம் க.பொ.த.(உ/த) கற்கத் தகுதி பெற்றுள்ளனர். கடந்த வருடத்திலும் இவ்வருடம் 16607 பேர் கூடுதலாகத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் கணிதத்தில் 67.2 வீதத்தினர் சித்தி பெற்றுள்ளனர். கடந்த வருடத்திலும் பார்க்க 19808 பேர் கூடுதலாக சித்தி பெற்றுள்ளனர். இம்முறை 9960 பேர் 9 பாடங்களிலும் A சித்தி பெற்றிருக்கின்றனர். தேசிய ரீதியில் க.பொ.த.(சா/த) 2017 பரீட்சையில் 6 பேர் முதல் இடத்தையும் 9 பேர் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியான செல்வி மிருதி சுரேஷ்குமார் தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பெற்றவர்களில் ஒருவராவார்.

இப்பரீட்சையில் பெறு பேறுகள் அடிப்படையில் மாணவர்கள் க.பொ.த. (உ/த) வகுப்புக்கு கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், கலை எனப் பிரித்து செல்வர். ஏற்கனவே மாணவர்களில் மிகக் கூடிய பிரிவினர் தங்களின் பரீட்சை செயற்பாட்டை சுய மதிப்பீடு செய்து தங்களின் விருப்பத்துக்கு ஏற்ப க.பொ.த (உ/த) வகுப்புப் பிரிவு ஒன்றைத் தெரிந்து தனியார் கல்வி நிறுவன வகுப்புக்களுக்கு கடந்த மூன்று மாதங்களாகச் சென்று வருகின்றனர். பாடசாலைகளில் க.பொ.த. (உ/த) வகுப்புக்கள் மே மாதம் வரையிலேயே ஆரம்பமாகும். பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த நிலையில் மாணவர்களின் சுய மதிப்பீட்டு எதிர்பார்ப்பில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

க.பொ.த(உ/த) கற்க மிகக் குறைந்த தகைமையானது மொத்தமாக தாய் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றும், இவைகளுள் மூன்று பாடங்களில் C சித்தி பெற்று இருக்க வேண்டும். எனினும் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பங்கள், வர்த்தகம், கலை-சமூகவிஞ்ஞானம், கலை-மானிடக் கற்கை, கலை-நுண்கலை போன்ற பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் நிபந்தனைகள் வேறுபடும். கணிதப் பிரிவில் சேருவதாக இருந்தால் மேற்கூறிய நிபந்தனையுடன் கணிதத்தில் C சித்தி பெற்றிருக்கு வேண்டும். இது போல விஞ்ஞானப்பிரிவில் சேருவதற்கு விஞ்ஞானத்தில் C சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மாணவர்களின் பாடத் தெரிவை தீர்மானித்த, தீர்மானிக்க இருக்கும் காரணிகளைக் கண்டறிவது மிகவும் கடினம். மாணவர்கள் தங்கள் சுய விருப்பத்திலா அல்லது நண்பர்களின் செல்வாக்கிலா அல்லது எதிர்கால வேலைவாய்ப்புப் பின்புலங்களைக் கருத்திற்கொண்டு பாடத்தெரிவை மேற்கொண்டார்களா? மேலும் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், சீனியர் அண்ணா, அக்காமார் போன்றோரின் அறிவுரைகள் செல்வாக்குச் செலுத்துகின்றதா எனத் தெரியவில்லை. எனினும் மாணவர்களின் பாடத் தெரிவில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும் பாடசாலைகளின் இடவமைவு, அவைகள் வழங்கும் கற்கைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பும் முக்கியம் பெறுகின்றன.

இக்கட்டுரையின் பிரதான நோக்கம் க.பொ.த. (சா/த) தரத்தில் க.பொ.த (உ/த) கல்வி கற்க தகுதி பெற்ற மாணவர்களை உயர்தரம் கற்க ஊக்குவிப்பதும் மேலும் கணித விஞ்ஞானப் பிரிவுகளுக்குத் தகுதி பெற்ற மாணவர்களை இப்பிரிவுகளில் கல்வி கற்க ஊக்குவிப்பதுமேயாகும். குறிப்பாக கணித, விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவத்தை பல பிரிவிடம் பரப்புரை செய்வதும் இத்துறைகளை வலுப்படுத்துவதுமாகும்.

இன்று தமிழ்மக்கள் எதிர் நோக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சமூக மேம்பாடுகளுக்கு முக்கிய காரணம் தமிழ்மக்கள் மத்தியில் இன்று தேவைப்படும் கல்வியைப் பெற்றிருக்காத தேயாகும். தமிழ்மக்கள் மத்தியில் இன்று போதியளவு கணித, விஞ்ஞானப் பட்டதாரிகள் மற்றும் க.பொ.த உயர்தரப் பிரிவில் கணித, விஞ்ஞான தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. இதனால் தமிழர் மத்தியில் கணித , விஞ்ஞான பின்புல நிபுணர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், தொழிற்படை மிகவும் சிறிதாக இருக்கின்றது. இதனால் கிடைக்கக்கூடிய தொழில்களைக் கூட பெற முடியாத நிலையில் தமிழினம் இன்றுள்ளது. இலங்கை பூராகவும் தமிழ்ப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்க தமிழ் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிறது. கணித, விஞ் ஞான பட்டதாரி போதியளவில் இல்லாமையால் ஆசிரிய வெற்றிடங்களை முழுமையாக நிரப்ப முடியாதுள்ளது. பல்வேறு தொழில்நுட்பப் பதவிகளும் தாதியர் பதவிகளும் இருந்த பொழுதும் தகுதி பெற்ற தமிழர்கள் மிகக் குறைவாக இருப்பது கவலையைத் தருகின்றது.

இச்சூழ்நிலையில் தமிழ் மாணவர்கள் தங்களது நலனுக்காகவும் தமிழ்மக்களதும் மற்றும் மாகாணத்தின் நன்மைக்காகவும் க.பொத. (உ/த) கணித, விஞ்ஞானப்பிரிவுகளில் இணையவேண்டும் என்ற கோரிக்கை இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்றது. தகுதி பெற்ற மாணவர்கள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளைத் தெரிவு செய்வார்களாக இருந் தால் எமது மாகாணத்தில் க.பொ.த (உ/த) மாணவர்களில் 40 வீதத்திற்கு மேற்பட்டோர் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் க.பொ.த. உயர்தர மாணவர்கள் கல்வி கற்கும் ஆரோக்கிய நிலை ஏற்படும். இவ் இலக்கு நாட்டினதும் எமது இனத்தினதும் மாகாணத்தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் இணைவதால் இன்று குறைந்த புள்ளிகளுடன் பல்கலைக்கழக அனுமதி பெற முடியும். மேலும் எதிர் காலத்தில் பொருத்தமான தொழில்களைப் பெறுவது இலகுவாக இருப்பதுடன் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கூட வசதியாக இருக்கும் என்பது உண்மையாகும். மேலும் எதிர்கால அறிவுசார் தொழில்நுட்பம் பொருளாதார கட்டமைப்பில் கணித, விஞ்ஞானத் துறைகளில் தேர்ச்சி பெற்றோர் புலமையானவர் ள் முக்கிய இடம் வகிக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன. இத்தகைய எதிர்காலச் சிறப்புக்களை கொண்ட கணித விஞ்ஞானப் பிரிவுகளை கற்பது கடினம் என புறந்தள்ளி விடாதீர்கள். பொதுவில் கற்பது கடினமாக இருப்பின் கற்றபின் நல்ல வாழ்வு கிட்டுகின்றது என்பதை யாவரும் அறிவர். மேலும் கபொ.த. (சா/த) வகுப்பு வரை எல்லா மாணவர்களும் கணிதம்/ விஞ்ஞானப் பாடங்களை கற்று தேர்ச்சி பெற்றுள்ளீர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் கைத்தொழில் புரட்சியை முன்னெடுத்த முதல் நாடான பிரித்தானியா கணித, விஞ்ஞானக் கல்விக்கு சரியான முக்கியத்துவம் கொடுக்கத் தவறியதால் இன்று உற்பத்தித்துறை (Manufacturing) பின்தள்ளப்பட்டு தனது முன்னைய இடத்தை இழந்து விட்டதுடன் கணித, விஞ்ஞான ஆளணியினரை வெளிநாடுகளில் இருந்து வரவழைக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

தமிழ்மக்கள் ஒருகாலத்தில் கணித, விஞ்ஞானக் கல்வி யில் சிறந்து விளங்கி இலங் கையில் பல்கலைக்கழகங்கள் உட்பட நாடு முழுவதும் பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ளனர். இன்று இத்துறைகளில் எம்மவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவடைந்துள்ளது. 1970 களில் நைஜீரியாவில் விஞ்ஞானக் கல்வியை வளர்ப்பதில் எம்மவர்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். இது போல இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் கணித, விஞ் ஞானத்துறைகளில் எம்மவர்கள் பங்களிப் பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

1970களில் தமிழ் மாணவர்கள் கணித, விஞ்ஞானத் துறைகளில் சிறந்து விளங்கியதால் தான் அரசு மொழிவழி தரப்படுத்தலையும் மாவட்ட கோட்டா முறையையும் அமுல்படுத்தி எமது மாணவர்களில் பல்கலைக் கழகப் பிரவேசத்தைக் குறைத்தது. ஆனால் இன்று இதே மாவட்டக் கோட்டா முறை மூலம் தமிழ்மாணவர்கள் பல் கலைக் கழகங்களுக்குச் செல்ல உதவியாக இருக்கின்றதென்பது மிகவும் கசப்பான உண்மையாகும்.

க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் தரத்தை உயர்த்தவும் கல்வி நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் இணைந்து செயற்பட்டால் ஓரிரு ஆண்டுகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரமுடியும். ஒவ்வொரு கல்வி வலயமும் ஒவ்வொரு 1AB பாடசாலையும் தமக்கேயுரிய தூரநோக்குப் பணி, இலக்குகள், தந்திரோபாயங்கள், வழிநடத்தும் செல்நெறிகளைக் கடைப்பிடிக்கவேண்டும். ஒவ்வொரு 1AB பாட்சாலைகளில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளை குறுகிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும்.



பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

வடக்கு மாகாணத்தில் இருக்கும் கல்வி வலயங் களுக்கும் அவற்றுக்குக் கீழிருக்கும் 1AB பாடசாலைகளும் பின்வருமாறு,

**யாழ்ப்பாணம்:** யாழ்ப்பாண மத்திய கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, வைத்தீஸ்வரா வித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, திருக் குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் "இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தா, இடைக்காடு மகா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி.

**தென்மராட்சி:** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**தீவுப்பகுதி:** வேலணை மத்திய மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி.

**வலிகாமம்:** யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, விக்டோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி

**வடமராட்சி:** ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த மிஷன் பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் ஆண்கள் பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பெண்கள் பாடசாலை, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

**கிளிநொச்சி:** முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், புனித திரேஷா மகளிர் கல்லூரி, வட்டக்கச்சி மகா வித்தியாலயம், பளை மகா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தி.

**மன்னார்:** சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, அல் அசார் வித்தியாலயம், அலிசார் மத்திய மகா வித்தியாலயம், பற்றிமா மகா வித்தியாலயம், முருங்கன் மகா வித்தியாலயம், முசலி மகா வித்தியாலயம், புனித ஆன் வித்தியாலயம்

**மடு:** அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்

**துணுக்காய்:** மல்லாவி மகா வித்தியாலயம்

**முல்லைத்தீவு:** முல்லைத்தீவு மகா வித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி, புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், விசுவமடு மகா வித்தியாலயம்

**வவுனியா தெற்கு:** இறம்பைக்குளம் தமிழ் மகளிர் வித்தியாலயம், வவுனியா மத்திய மகா வித்தியாலயம், பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம், புதுக்குளம் மகா வித்தியாலயம், ஓமந்தை மகா வித்தியா லயம், சைவப்பிரகாசா இந்து மகளிர் கல்லூரி, விபுலானந்தா வித்தியாலயம்.

**வவுனியா வடக்கு:** நெடுங்கேணி மகா வித்தியாலயம்.

ஒவ்வொரு கல்வி வலயத்திலும் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை மேம்படுத்துவதில் வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதுபோல் ஒவ்வொரு 1AB பாடசாலைப் பிரச்சினைகளும் வேறுபட்டனவாக இருக்கின்றன. எனினும் திறமையான கல்வி அதிகாரிகள், அதிபர்கள் மூலம் கணித, விஞ்ஞானக் கல்வியை முன்னேற்ற முடியும். மேலும் வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, செட்டிகுளம், மடு பிரதேச செயலகப் பிரிவுகளில் 1AB பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் வடமராட்சி வலயங்களில் 1AB பாடசாலைகள் மறுசீரமைக்கப்படவேண்டும். 1AB தரத்தைப் பெற்றும் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் மாணவர்களைக் கொண்டிராத பாடசாலைகள் இருக்கின்றன. அதேநேரத்தில் துரிதமாக வளர்ந்து வரும் 1C தர பாடசாலைகள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிக்க முடியாதுள்ளன. இக்குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டும். கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் கள் இணைந்து மாணவர்களை சரியாக வழிநடத்தின்வடமாகாணத்தில்கபொத கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கற்கும் மாணவர் எண்ணிக்கையையும் இவர்களின் தரத்தையும் மிகக்குறுகிய காலத்தில் உயர்த்த முடியும். இதுவே தருணம் இணைந்து செயற்பட.

# எங்களிடம் இயல்பாக ஒரு பலவீனம் காணப்படுகிறது

## பலாலியில் சுட்டிக்காட்டினார் வடக்கு முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

ஏதாவதொரு பொருள் அல்லது விடயம் இலவசமாகக் கிடைக்கின்றது என்றால் அது தரம் குன்றியது என்ற தவறான எண்ணம் எங்களிடம் இயல்பாக ஒரு பலவீனமாகக் காணப்படுகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலாலி கிழக்கில் கணனி வள நிலையத்திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், லண்டன் பலாலி சமூகக் கூட்டமைப்பு அறக்கட்டளையின் நிதி உதவியுடன் பலாலி வாழ் மாணவ மாணவியர்க்கு e- கற்கை முறை நடவடிக்கைகளின் மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதிதாக அமைக்கப்பட்ட பலாலி கணனி வள நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன். நீண்டகால இடப்பெயர்வுகள், பொருட் சேதங்கள், மன உளைச்சல்களுக்கு ஆளான இந்தப் பலாலி வாழ் மக்கள் தற்போதுதான் தமது சொந்த நிலங்களில் குடியேறி பழைய இயல்பு நிலை வாழ்க்கைக்கு திரும்ப முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். இச் சந்தர்ப்பத்தில் இப் பகுதியில் வாழும் மாணவ மாணவியரின் கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவுகளை ஓரளவிற்காவது நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற எமது உறவுகளின் சிந்தனையில் உருவானதே இந்த e- கற்கை நிலையம். அவர்களுள் பலர் கடல்கடந்த நாடுகளில் தற்போது வசித்து வருகின்றார்கள்.

போதியளவு கணனி அறிவுகளைக் கூட பெற்றுக் கொள்வதற்கு சிரமப்படுகின்ற இந்த மாணவ மாணவியர்க்கு e- கற்கை முறை அவசியமானதா என்ற கேள்வி உங்களில் பலரின் மனதில் எழக்கூடும். ஆனால் நீண்டகால யுத்தம், இடப்பெயர்வுகள் காரணமாக நாம் தொலைத்து விட்ட அல்லது நாம் பின் தங்கி நிற்கும் கற்கைநெறிகளை எதுவித தடங்கலும் இன்றி மேற்கொள்ள வேண்டுமெனின் எம் மாணவ மாணவியர்க்கான கற்பித்தல் நடைமுறைகள் இரட்டிப்பு வேகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் விளைவாகவே இந்த e கற்கை முறைமை இம் மாணவ மாணவியர் மத்தியில் அறிமுகப்படுத்தப்படுகின்றது என எண்ணுகின்றேன். e கற்கை நெறி மூலம் என்ன அனுகூலங்கள் கிடைக்கப்பெறும் என்பது உங்களில் பலருக்கு கேள்விக் குறியாக அமையலாம். ஏட்டுக் கல்வி முறைமை வலுவாகக் குறைக்கப்பட்டு மாணவ மாணவியர் தேடிக்கற்கின்ற முறைகள் மூலம் கூடிய அறிவுகளைப் பெறுக் கொள்வதும் இயற்கையோடு ஒத்த தத்துவார்த்த முறையிலான கற்கை நெறிகளைப் பின்பற்றுவதும் தற்பொழுது கூடிய வரவேற்பைப் பெற்று வருகின்றன. வெறுமனே பரீட்சைகளுக்கு தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் கற்ற கல்வி மேற்படிப்புகளுக்கோ அல்லது அன்றாட வாழ்க்கைக்கோ உதவாத நிலையில் அவற்றை மூலையில் தூக்கிப் போடுகின்ற நிலையே இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்தது எனலாம். ஆங்கிலேயர் காலத்தில் மூன்று 'R'களுந் தான் பழப்பிக்கப்பட்டது. Arithmetic அல்லது கணக்கு, Reading அல்லது வாசித்தல் அத்துடன் writing அல்லது எழுதுதல் என்பன அவை. ஆங்கிலேயர்களுக்கு இலிகிதர் வேலை செய்ய இவை போதுமானதாக இருந்தன. இன்று எமது மாணவ மாணவியர் பலதையும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வெறும் கூட்டல் கழித்தல்களை விட குறிக்கணக்கியல், வடிவியல், முக்கோணவியல் போன்றவற்றையும் வாசித்தல், எழுதுதல் கூடிய பலனுள்ள பாடங்களை உள்ளடக்குவதாகவும் அமைய வேண்டும் என இன்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நிலையை ஒதுக்கியே இன்றைய நவீன கற்கை முறைமைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தொழிற்றுறை கற்கை முறைமை, தகவல் தொடர்பாடல் கற்கை முறைமை, இலத்திரனியல் கற்கை முறைமை, கணனி மூலமான கற்கை முறைமை ஆகியன இம் மாணவ மாணவியர்க்கு எக் காலத்திலும் உதவக் கூடியன என தற்பொழுது இனங் காணப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் மேலதிக கற்றல் நடவடிக்கைகளிற்கும் ஒரு அத்திவாரமாக இந்த e- learning கற்கை முறைமை அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அவ்வாறான கற்கை முறைமையை எமது மாணவ மாணவியர்க்கு அறிமுகப்படுத்துவது சாலச் சிறந்ததே.

இலத்திரனியல் சாதனங்களின் வருகைக்கு முன்பதாக மாணவ மாணவியர் தமது அறிவுப் பசியை புத்தகங்களினூடாகவே தீர்க்க வேண்டிய தேவைப்பாடு இருந்தது. அதனால் நல்ல பல புத்தகங்கள் அந்த மாணவ மாணவியரின் அறிவுப் பசியைத் தீர்ப்பனவாக அமைந்திருந்தன. அந்தக் காலங்களில் மாணவ மாணவியர்க்குப் பொழுதுபோக்குச் சாதனங்களாகத் தொலைக்காட்சிப் பெட்டியோ, கையடக்கத் தொலைபேசிகளோ மற்றும் இன்னோரன்ன இலத்திரனியல் சாதனங்களோ கிடைக்கப் பெறவில்லை. வானொலிப் பெட்டிகள் கூட மிக மிக சிலரின் வீடுகளிலேயே காணப்பட்டன. ஆகவே மாணவர்களின் பொழுது போக்குகள் வாசிப்புத்துறையிலேயே கூடுதலாகச் செலவழிக்கப்பட்டன. அப்போதெல்லாம் ஆங்கில மொழி கற்கை நெறியில் வரலாறு, குடியியல் போன்ற பாடங்களில் கல்வி கற்ற வர்களே ஆங்கில அறிவில் மிகச் சிறந்து விளங்கினார்கள். இதைத்தவிர, கிரேக்க மொழிகள் கூட எமது மாணவப்பருவத்தில் கற்பிக்கப்பட்டன. நான் கொழும்பு சட்டக் கல்லூரியில் சேர முன் இலத்தீன் மொழியில் விசேட சித்தி பெற வேண்டியிருந்தது. இலத்தீன் மொழி எமது ஆங்கில அறிவுக்கு மெருகூட்டி நின்றது. அப்பொழுதெல்லாம் நாங்கள் ஆங்கில நூல்களையே பெரும்பாலும் நாடி நின்றோம். ஆனால் தாய்மொழி மூல கற்கை முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஆங்கில அறிவு குன்றியது மட்டுமல்லாமல் தமிழில் போதிய நூல்கள் இல்லாததால் நூல்கள் வாசிக்கும் பழக்கமும் குன்றத் தொடங்கியது. ஏனைய சமூகங்களுடனான தொடர்பாடல்கள் மட்டுப்படுத்தப்பட்டன. பரஸ்பரம் புரிந்துணர்வு அற்ற நிலை, சந்தேகங்கள், கருத்து வேற்றுமைகள் என சமூகங்களுக்கிடையே விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. இதனால் இரண்டு குறைபாடுகளை மாணவ மாணவியர் எதிர் நோக்கினர். ஒன்று தமிழில் துறைசார்ந்த அறிவு நூல்கள் இல்லாமை. மற்றையது ஆங்கில நூல்களை வாசித்தறிய முடியாதிருந்தமை. நான் சட்டக் கல்லூரியில் முதன் முதலாக சட்டத்தைத் தமிழில் 1971 ஆம் ஆண்டு பயிற்றுவித்த போது எனது விரிவுரைகள் மட்டுமே அதிகப்படியான மாணவ மாணவியரால் பரீட்சைக்குப் பாவிக்கப்பட்டன. உசா நூல்களை ஆங்கிலத்தில் வாசித்தறிய முடியாத வர்களாக அவர்கள் இருந்தார்கள். இந்த இடைவெளி நிரப்பப்படுவதற்கு தற்போது ஏற்ற நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவது மனமகிழ்வைத் தருகின்றது.

e- கற்கைமுறைமையானது ஒருவிதத்தில் ஆங்கில மொழி விருத்திக்கான ஒரு மார்க்கமாக எடுத்துக்கொள்ளலாம். இன்றைய மாணவ மாணவியரின் அறிவுத் தேடல்களுக்கு கணனிகள் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றன. தேவையான விடயங்களை ஒரு நொடியிலேயே கணனி மூலம் தரவிறக்கம் செய்து வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். e- கற்கை முறைமை மூலம் மாணவ மாணவியர் எதிர்காலத்தில் வீட்டில் இருந்தவாறே தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. உண்மையில் அவ்வாறே தற்போது பல மேலைத்தேயங்களில் நடைபெறுகின்றன.

இன்று திறந்து வைக்கப்படுகின்ற இந்தக் கணனி நிலையத்தில் மாணவ மாணவியர் கணனி பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக ஆரம்பத்தில் ஓரிரு மாதங்களிற்கு கணனி அறிவு புகட்டப்பட இருப்பதாக அறிகின்றேன். அதனைத் தொடர்ந்து e-கற்கை பாடநெறிகள் கணனி மயப்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாணவ மாணவியர்க்கும் கணனிகள் வழங்கப்படுவன என அறிகின்றேன். ஆசிரியர் கற்பிக்கின்ற பாடங்களை கணனியில் அவதானித்து கிரகித்துக்கொள்வதுடன் சந்தேகங்களை ஆசிரியரிடம் நேரடியாகக் கேட்டு தெரிந்து கொள்வதற்கும் ஏற்ற முறையில் இந்தக் கற்கை நெறிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன என்று அறிகின்றேன். அதுமட்டுமல்லாது இதற்கு அடுத்தபடியாக google வலைத்தளங்களில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட பாடநெறிகள் வகுப்பறையில் பொருத்தப்பட்ட 40" அளவிலான தொலைக்காட்சியில் திரையிடப்பட்டு கல்வி அறிவை அதன் மூலம் புகட்டுவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிகின்றேன்.

பலாலி வாழ் மக்கள் சிறந்த முயற்சியாளர்கள் என்ற பெயர் பெற்றவர்கள். விவசாய முயற்சிகளிலும் கூடுதல் ஆர்வம் காட்டுகின்றவர்கள். கல்வி அறிவில் எவ்வளவிற்கு உயர்ந்து விளங்குகின்றார்களோ அந்தளவிற்கு விவசாய முயற்சியிலும் கடுமையாக ஈடுபடுகின்றவர்களாக காணப்படுகின்றார்கள். ஆகவே முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்ற தத்துவத்தை நீங்கள் அறிந்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கருதலாம். உங்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக சிறந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக அறிகின்றேன். அவர்களின் உதவி பெற்று நீங்கள் ஒவ்வொருவரும் கல்வி கேள்விகளில் சிறக்க உங்களை வாழ்த்துகின்றேன். இளமையிற்கல் என்றார் ஔவைப்பாட்டி. இந்த வயதில் கல்வி கற்காவிடில் வயது வந்த துங் கற்பது எளிதில் மறந்து போகும்.

எங்களிடம் இயல்பாக ஒரு பலவீனம் காணப்படுகின்றது. ஏதாவதொரு பொருள் அல்லது விடயம் இலவசமாகக் கிடைக்கின்றது என்றால் அது தரம் குன்றியது என்ற தவறான எண்ணம் எம்மிடையே காணப்படுகின்றது. இந்த இலவசக் கல்வி நிலையத்தில் அனைத்தும் தரமானவையாக, முதலாவது தரத்தில், வழங்கப்பட இருப்பதால் இலவசம் தானே என்று இகழ்ந்து விடாமல் கல்வி கேள்வி அறிவுகளில் நீங்கள் நன்மைபெற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். உங்களுக்கு இலவசக் கல்வியில் விருப்பம் இல்லாவிட்டால் உங்களால் முடிந்தளவு பணத்தை மாதாந்தம் செலுத்தி உங்கள் கல்வி அறிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு செலுத்தப்படுகின்ற பணம் யாவும் உங்கள் ஒவ்வொருவரின் பெயர்களிலும் வங்கிகளில் வைப்பிலிடப்படுவன. எதிர்காலத்தில் உங்கள் சுபீட்சத்திற்காக உங்கள் வங்கிப் புத்தகங்கள் உங்களிடம் கையளிக்கப்படும் என்ற நல்ல செய்தியும் நிர்வாகத்தினரால் எனக்கு தெரிவிக்கப்பட்டது.

அன்பார்ந்தவர்களே! வாய்ப்புக்களும், வசதிகளும் எப்போதும் எமது கதவுகளைத் தட்டுவதில்லை. அவ்வாறு தட்டும்போது முடிந்தளவு அவற்றின் பலாபலன்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் சேவையில் மறுசீரமைப்பு

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

பொலிஸ் சேவையில் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று சட்டம் ஒழுங்கு பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் கிரிவெஹர ரஜமகா விஹாராதிபதி றுஹூணுமஹாபத்துவெயின் தலைமை சங்க நாயக்கர் சங்கைக்குரிய ஒபவக்க தம்மிந்த தேரரை அமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்த போது இந்த விடயத்தை தெரிவித்தார். நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக அமைச்சர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், பொதுமக்களால் நிராகரிக்கப்படும் இவ்வாறான நடவடிக்கையின் காரணமாக நாட்டின் அபிவிருத்திக்கு அரசாங்கம் எப்போதும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமானதாகும் என்றும் சுட்டிக்காட்டினார். கதிர்காமம் வருடாந்த உற்சவத்தை மிகவும் சிறப்பான முறையில் நடத்துவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. உற்சவத்திற்காக ஆறு கோடி ரூபா செலவாகும் என்று தேரர் சுட்டிக்காட்டினார். (இ)

# முதலாவது தபால் முத்திரைக்கு நேற்றுடன் 161 ஆண்டுகள் நிறைவு

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்டு நேற்றுடன் 161 வருடங்கள் பூர்த்தியடைந்தன.

பிரிட்டனின் விக்டோரியா ராணியின் உருவப்படத்துடன் முதலாவது தபால் முத்திரை 1857 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்டது.



1857 ஆம் ஆண்டு முதல் 1935 ஆம் ஆண்டு வரை இந்த நாட்டின் தபால் முத்திரைக்கா எலிசபெத் மகாராணி மற்றும் பிரிட்டிஷ் மன்னர் குடும்பத்தின் உருவப்படங்கள் அல்லது ஆளுநரின் உருவப் படங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. 1935 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் பெருமையை முன்னிலைப் படுத்தும் வகையில் முத்திரைகளுக்கான புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டன. இதுவரையில் இலங்கையின் அபிமானம் தொடர்பில் பாரம்பரியம் மற்றும் மதங்கள் போன்று இயற்கை முக்கியத்துவம் மிக்க இடங்கள் மாத்திரமே தபால் முத்திரைகளுள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக முத்திரை பணியகத்தின் பணிப்பாளர் எச்.வி.டி. அபேவிக்ரம தெரிவித்துள்ளார். (இ)

# 3 பாடசாலைகளுக்கு வெளிநாட்டு உதவிகள்

(கரணவாய்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு வெளிநாட்டின் உதவிகள் கிடைக்கப் பெறவுள்ளன.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மணற்காடு றோ.க.த.க பாடசாலை, ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்கு கற்றலுக்கான உதவிகள் செய்யப்படவுள்ளன.


சுவிஸ், அயர்லாந்து, நோர்வே ஆகிய மூன்று நாட்டின் பிரதிநிதிகள் கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை அன்று வடமராட்சி கிழக்கிலுள்ள இந்த மூன்று பாடசாலைகளுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

அவர்கள் பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடி பாடசாலையின் தேவைகள் குறித்து ஆராய்ந்தனர்.

சுனாமி ஆழிப் பேரலையினால் யாழ். மாவட்டத்திலே வடமராட்சிக் கிழக்குப் பகுதியிலேயே அதிகளவான பாதிப்பு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-6)




# சத்திரம்



ஒருமுறை பீர்பால் தன் சொந்த வேலை காரணமாக அயல்தேசம் செல்ல நேரிட்டது. செல்லும் வழியில் அரண்மனை ஒன்று தென்பட்டது. மிகவும் அசதியாக இருந்த பீர்பால் அதில் சிறிது நேரம் தங்கிச் செல்லலாம் என முடிவு எடுத்தார். அது அயல்நாட்டு மன்னனின் அரண்மனையாகும். அந்த விடயம் பீர்பாலுக்கு தெரியாது.

அக்பரின் ஆளுகைக்குட்பட்ட மண்ணில் இருக்கும் அரண்மனை என்றே அவர் நினைத்தார்.

அந்த அரண்மனையின் பின்புறம் சென்று குதிரையைக் கட்டிவிட்டு பார்த்தார். ஆள் அரவமே இல்லை.அரண்மனைக்குள் புகுந்ததும் அடுக்களை தென்பட்டது. தமக்கிருந்த பசியில் சிறிதும் யோசிக்காமல் உணவினை எடுத்து உண்டார். பின்னர் அடுத்த அறைக்குச் சென்றார். அழகான பஞ்சு மெத்தையுடன் கூடிய படுக்கையறை. உண்ட மயக்கத்தில் அந்த படுக்கையில் படுத்து உறங்கியும் விட்டார்.

வேட்டையாடச் சென்றிருந்த மன்னர் சற்று நேரத்திற்கெல்லாம் வந்து விட்டார். தன் உணவை உண்டு விட்டு தன்னுடைய படுக்கையில் படுத்திருப்பவனைப் பார்த்ததும் சினம் கொண்டு பீர்பாலைத் தட்டி எழுப்பினார்.

"என் அரண்மனைக்குள் புகுந்து என் உணவினை உண்டு என் படுக்கை அறையில் படுத்திருக்கிறாயே?" என்று அதட்டினார்.

"ஓஹோ! இது அரண்மனையா? காவலர் யாருமே இல்லாததால் இதனை சத்திரம் என்று நினைத்தேன்!" என்றார் பீர்பால் அலட்டிக் கொள்ளாமல்.

தன்னை மன்னர் என்று அறிமுகம் செய்தும் சற்றும் அஞ்சாமல் தன்னுடைய அரண்மனையை தர்ம சத்திரம் என்கிறானே இவன் என கோபமுற்றார் அந்த மன்னர்.

"உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கிறதா? அரண்மனைக்கும் தர்ம சத்திரத்திற்கும் கூட உனக்கு வித்தியாசம் தெரியவில்லையே!" என்று கடிந்தார் மன்னர்.

"மன்னர் அவர்களே.. இது அரண்மனையாகவே இருந்தாலும் இதனையும் தர்ம சத்திரம் என்று அழைப்பதில் தவறில்லை!" என்றார் பீர்பால்.

"ஓர் அரண்மனை எப்படி சத்திரமாக முடியும்? சத்திரம் என்றால் இன்று ஒருவர் வருவார் நாளை போய்விடுவார்! மறுநாள் வேறொருவர் வருவார்.. பிறகு சென்று விடுவார்.. இங்கேயே தங்கமாட்டார்கள். அரண்மனை அப்படி அல்ல. நான் நிரந்தரமாக தங்கி இருக்கிறேனே!" என்றார் மன்னர்.

"மன்னர் அவர்களே் உங்கள் பாட்டனார் எங்கே தங்கி இருந்தார்?"

"இதே அரண்மனையில் தான்!" "உமது தந்தையார்?"

"இதே அரண்மனையில் தான்!"

"நாளை உங்களுக்குப் பின் யார் தங்குவார்கள்?"

"இதென்ன கேள்வி? எனது மகன் தங்குவான்!"

"ஆக இந்த அரண்மனையில் யாருமே நிரந்தரமாக தங்கி இருக்கவில்லை! தங்கள் முன்னோர் சில காலம் தங்கி இருந்து விட்டு சென்று விட்டனர். இப்போது நீங்கள். உங்களுக்குப் பின் உங்கள் மகன். எனவே சத்திரத்துக்கும் அரண்மனைக்கும் எந்த வேறுபாடும் இல்லை!" என்றார் பீர்பால்.

பீர்பால் சொல்வதில் உள்ள உண்மை மன்னருக்கு விளங்கியது. வந்திருப்பவர் சாமான்யர் இல்லை என்பது விளங்கியது அவருக்கு!

"தாங்கள் யார்?" என்று மரியாதையுடன் வினவினார் அரசர்.

"என்னைப் பீர்பால் என்று அழைப்பார்கள்!" என்று பதில் சொன்னார் பீர்பால்.

"அந்த மாமேதை நீங்கள் தானா? தங்களின் புகழை நானும் கேள்விப்பட்டு இருக்கிறேன். இதுவரை பார்த்தது இல்லை. நான் மிகப்பெரிய தவறு செய்து விட்டேன். வருத்தம் வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள்!" என்றார் அரசர்.

அந்த மன்னனின் அன்புக் கட்டளையை ஏற்று பீர்பால் மேலும் சில நாட்கள் அவரின் விருந்தினராகத் தங்கி இருந்து விட்டு பிறகு தான் செல்ல வேண்டிய இடத்துக்கு புறப்பட்டார்.

## 04.2018 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1755-பிரித்தானியக் கடற்படைத்தளபதி வில்லியம் ஜேம்சு இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ள மராத்தா கோட்டையைக் கைப்பற்றினார்.

❖1800-லுடுவிக் வான் பேத்தோவன் தனது முதலாவது சிம்பொனியை வியன்னாவில் அரங்கேற்றினார்.

❖1851- நான்காம் இராமா தாய்லாந்தின் மன்னராக முடிசூடினார்.

❖1865-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு தலைவர் ஜெபர்சன் டேவிஸ் மற்றும் அவரது அமைச்சர்கள் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்டை விட்டுப் புறப்பட்டனர்.

❖1902-ரஷ்யப் பேரரசின் உட்துறை அமைச்சர் திமீத்ரி சிப்பியாகின் செண் பீட்டர்ஸ்பேர்க் நகரில் படுகொலை செய்யப்பட்டார்.

❖1902-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது முழுநேரத் திரையரங்கு கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் திறக்கப்பட்டது.

❖1911-அவுஸ்ரேலியாவில் முதலாவது தேசிய மக்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

❖1912-டைட்டானிக் கப்பல் தனது முதலாவது கடற்பயண ஒத்திகையை ஆரம்பித்தது.

❖1972-1950களில் கம்யூனிஸ்டாக அறிவிக்கப்பட்ட பின்னர் நடிகர் சார்லி சாப்ளின் முதற்தடவையாக அமெரிக்கா திரும்பினார்.

❖1983-யாழ்ப்பாணம் அரச அதிபரின் செயலகத்தில் விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதல் நடத்தினர்.

❖2011-மும்பையில் துடுப்பாட்ட உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் இந்திய அணி இலங்கையை 6 இலக்குகளால் வென்று கோப்பையைப் பெற்றது.

### பிறப்புகள்

❖1881-வ.வே.சு.ஐயர். இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 1925)

❖1914-அலெக் கின்னாஸ், ஆங்கிலேய நடிகர் (இ. 2000)

❖1969-அஜய் தேவ்கான், இந்திய நடிகர்

❖1981-மைக்கல் கிளார்க், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

### இறப்புகள்

❖1973-மு. தளையசிங்கம். இலங்கை எழுத்தாளர் (பி. 1935)

❖2005-திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (பி. 1920)

❖2012-எம். சரோஜா. தென்னிந்திய நகைச்சுவை நடிகை

### சிறப்பு நாள்

❖ஒடிசா நாள் (ஒடிசா)

❖பன்னாட்டுக் குழந்தைகளின் புத்தக நாள்

❖உலக மதியிறுக்க விழிப்புணர்வு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 35 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 50 | 60 |
| தக்காளி | 30 | 20 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 25 | 40 | 40 |
| கோவா | 30 | 25 | 50 | 40 |
| கரட் | 80 | 80 | 100 | 160 |
| பூசணி | 80 | 25 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 45 | 30 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 55 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 100 | 140 | 20 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | — | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 35 | 50 | 150 |
| லீக்ஸ் | 150 | 110 | 180 | 200 |
| பீற்றூட் | 30 | 25 | 30 | 60 |
| கறிமிளகாய் | 80 | 30 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 220 | 300 | 400 |
| போஞ்சி | 200 | — | 140 | 200 |
| கத்தரித்தம்புள்ளா | 30 | — | — | 60 |
| கீரை-1பிடி | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 140 | 110 | 120 | 75 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 35-80 | 75 | 75 |
| இராசவள்ளி | 150 | 120 | 250 | 180 |
| வெங்காயப்பூ | — | 110 | 140 | 160 |
| முள்ளங்கி | — | 30 | 80 | 60 |
| பொன்னாங்காணி | — | 10 | 40 | 30 |
| வல்லாரை | — | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | — | 130 |

பிரார்த்தித்தால் கேட்டதைப் பெறுவோம் அல்லது கேட்டிருக்க வேண்டியதைப் பெறுவோம்.
– லெய்ட்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கில் பெண்கள் மீது பாலியல் துன்புறுத்தல் தொடர்கிறது

## உள சமூக செயற்பாட்டாளர்கள் சந்திரிகாவிடம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள பெண்கள மீது இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளின் பாலியல் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்வதாக வடக்கில் உள சமூக செயற்பாட்டாளர்கள், முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு உளவியல் ரீதியான பாதுகாப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வடக்கில் உள்ள உள சமூக செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல்ஒன்று நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அப்போது குறித்த உள சமூக செயற்பாட்டாளர்களிடம், போரால் பாதிக்கப்பட்ட பெண்களிடம் தாம் மீண்டெழுவதற்கான எதிர்பார்ப்பு உள்ளதா? அரச தனியார் துறை மற்றும் இராணுவத்தால் பெண்களுக்கு பாலியல் தொந்தரவு உள்ளதா? என சந்திரிகா பண்டாரநாயக்கா கேள்வி எழுப்பியிருந்தார். அதன்போதே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் மிகக் கூடுதலான அளவு உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். கல்வி வாய்ப்பு அதிகளவில் கிடைக்காத காரணத்தினால், தொழில் செய்வதற்கு கஷ்டப்படுகிறார்கள். இதனால் மன உளைச்சல் மற்றும் துணிவில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

மேலும் பல பெண்களுக்கு குடும்ப ஆதரவு மற்றும் தன்னம்பிக்கையை அளிப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் உள்ளார்கள். அவர்களின் பிரச்சினைகளை கேட்பதற்கு அதிகாரிகள் தயாராக இல்லை. இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

இதனால் சமூக பிறழ்வான நிலைக்குள் செல்ல சந்தர்ப்பம் ஏற்படுகிறது. குறிபாக உள, பொருளாதார உதவி பெண்களுக்கு தேவைபடுகிறது.

தாம் மீண்டெழுவதற்கான எதிர்பார்ப்பு பெண்களிடம் உள்ள போதும் அதை சரியான முறையில் நடைமுறைப்படுத்த எவரும் முன்வருவதில்லை.

மிக முக்கியமாக அரச தனியார் துறை மற்றும் இராணுவத்தால் தற்போதும் பெண்களுக்கு பாலியல் தொந்தரவு உள்ளது. ஆனால் அவற்றை துணிந்து வெளியில் சொல்வதற்கு தயங்குகிறார்கள்.

உடனடியாக தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் தொடர்ச்சியாக இந்த விடயத்தை அவர்களிடம் ஆறுதலாக கேட்டால் தெரிந்து கொள்ள முடிகிறது.

அரச அதிகாரிகள் உதவிகளை ஆரம்பத்தில் செய்து விட்டு பின்னடைவில் சுய தேவைகளுக்கு பயன்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள்.

இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல், துன்புறுத்தல் தொடர்பாக வெளியில் சொல்ல பெரிதும் தயங்குகிறார்கள். பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் தமது அதிகார பலத்தை பயன்படுத்தி கட்டுப்பாடு மேற்கொள்வதால் மேலதிக நடவடிக்கைகள் எம்மால் எடுக்க முடியாமல் உள்ளது.

மேலும் முகாமில் உள்ளவர்களின் குடும்பங்கள் பலவற்றில் தார திருமணம் நடைபெற்ற காரணத்தினால் அது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது என மேலும் தெரிவித்தனர்.

பெண்கள் தொடர்பான பல பிரச்சினைகள் காணப்படுவதால் அதற்காக வெகு விரைவில் 3 நாள் ஒதுக்கப்பட்டு இந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி விபரங்கள் சேகரிக்கப்படும என் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். (மு-9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில மிருசுவில், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றம், 52 ஆவது இராணுவ முகாம், எழுதுமட்டுவாழ், Tokyo cement ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பட்டானிசூரிலிருந்து நெளுக்குளம் ஊடாக இராயேந்திரகுளம் வரை, அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், ஓமேகா லைன், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, பட்டானிச் சூரிலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி, நெளுக்குளம் நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசததில தலைமன்னார்ப் பிரதேசம் ஒரு பகுதி, கட்டையடம்பன், மழவராயர் கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பிரமனாளன்குளத்தில் பேருந்து விபத்துக்குள்ளாகி பலர் காயம்

வவுனியா மன்னார் வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த தனியார் பேருந்து விபத்துக்குள்ளானதில் பயணிகள் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 4.00 மணியளவில் மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து பிரமனாளன்குளம் பகுதியில் கட்டுப்பாட்டை மீறி மின் கம்பத்தில் மோதி காட்டுப் பகுதியை நோக்கி 50 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு விபத்துக்குள்ளாகி உள்ளது.

இதன்போது குறித்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் பலர் சிறுகாயங்களுடன் தப்பியுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-315)

# ஆய்வாளர்களுக்கு; இராஜதந்திரம் ஆன்மிகவாதிகளுக்கு; இறை செயல்

கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் நடக்கின்ற போட்டி பற்றி நாம் யாரும் தெரிந்து கொள்ளவோ அன்றி அறிந்து கொள்ளவோ ஆர்வப்படுவதில்லை.

ஆனால் மனிதனைப் படைத்த கடவுள் எந்த நோக்கத்துக்காக மனிதனைப் படைத்தாரோ அந்த நோக்கத்தை மீறி – அதை விலக்கி தேவையற்ற பாதையில் மனிதன் பயணிக்கிறான்.

இதனால் கோபமுறும் கடவுள் இடையிடையே தனது சீற்றத்தை வெளிக்காட்டிக் கொள்கிறார் என்பது ஆத்மஞானிகளின் கருத்து.

இந்தக் கருத்து சரியா? பிழையா? என்பவற்றுக்கு அப்பால் தர்மத்தின் வழியில் மனிதப் பயணம் அமையத் தவறுமாக இருந்தால், அதன் விளைவு துன்பமும் வேதனையுமாகவே இருக்கும் என்பது நான்கு யுகங்களும் நமக்குப் போதிக்கும் பாடம்தான். இந்த விடயம் ஓர் அடிப்படைக் கருத்து.

இந்த அடிப்படைக் கருத்திலிருந்து சில அனுமானங்களுக்கு நாம் வந்தாக வேண்டும்.

நாம் ஒன்றை நினைக்க இன்னொன்று நடந்து விடுகிறது. இவ்வாறான சம்பவம் அரசியலில் நடக்கும்போது அதற்கு வெவ்வேறு விளக்கங்கள், வியாக்கியானங்களை அரசியல் ஆய்வு என்ற பெயரால் கொடுத்து விடுகின்றோம்.

இவ்வாறு அரசியல் சம்பவங்கள் அனைத்தும் இராஜதந்திர ரீதியில் நடக்கின்றன என நாம் விளக்கப்படுத்தினாலும் இன்னமும் இரண்டு வருடங்கள் ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற கால சந்தர்ப்பம் இருந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவேன் என மகிந்த ராஜபக்ஷ தீர்மானம் எடுப்பதற்குப் பின்னணியாக இருந்த அரசியல் இராஜதந்திரம் எது என்பது கேள்விக்குரியது.

இவ்வாறானதொரு கேள்வி எழுகின்றபோது எல்லாம் இறை செயல் என்ற பதிலைத் தவிர வேறு எதனையும் கூறமுடியாமல் போகும்.

இவை ஒருபுறம் இருக்க, இன்றைய தமிழர் அரசியலில் நடக்கின்ற செயற்பாடுகளைப் பார்க்கும்போது அரசியல் இராஜதந்திரம் என்ற பெயரால் இறை செயல் இயங்கத் தொடங்கி விட்டதோ என்று நினைப்பதில் தவறிருக்க முடியாது.

அதாவது உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியைப் பிடிப்பதுதான் தமக்கு வெற்றி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை நினைக்கிறது.

இந்த நினைப்பினூடாகத்தான் அடுத்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப்பெரிய சவாலை எதிர்கொள்ளப் போகிறது என்று கருத்துரைப்பவர்களும் இருப்பர்.

இங்கு அரசியல் ஆய்வாளர்களில் ஒரு பகுதியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திரத்தை மிகக் கெட்டித்தனமாகப் பிரயோகித்துள்ளது.

அதிலும் யாழ்ப்பாண மாநகர சபையில் கூட்டமைப்பு பிரயோகித்த இராஜதந்திரம் நினைத்துப் பார்க்க முடியாதது என்று கூறுவர்.

ஆனால் கூட்டமைப்பின் இந்த இராஜதந்திரம் எதிர்காலத்தில் தோல்வியாக மாறும்போது,

ஐயா! அன்று நாம் எடுத்த முடிவு தவறானது என்று சிந்திக்க வைக்கும்; அவ்வாறான ஒரு நிலைமையே எல்லாம் இறை செயல் என்பதாக நிலைமையை மாற்றும்.

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தெருப்பார்வை பலன்கள் எவை?**

கிழக்கு ஈசானிய தெருதாக்கம்: ஆண் புகழ்

வடக்கு ஈசானிய தெருதாக்கம்: செல்வம்

வடக்கு வாயவியம்: பெண்களுக்கு கேடு

மேற்கு வாயவியம்: சோகத்தைக் கொடுக்கும்

மேற்கு நைருதி தெருத்தாக்கம்: ஆண்கேடு

தெற்கு நைருதி தெருத்தாக்கம்: பெண் கேடு

தெற்கு ஆக்நேய தெருத்தாக்கம்: சுபம் தரும் (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பொருளும் மதிப்பும்



நம்மிடம் 10ரூபாய் நோட்டு ஒன்றும். 100 ரூபாய் நோட்டு ஒன்றும் உள்ளன என்று வைத்துக் கொள்வோம். இரண்டுமே காகிதம் தான். ஆனால். அதற்கு மதிப்பு என்று ஒன்று உள்ளது. அதே போல ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மதிப்பு உண்டு. அந்தப் பொருள் நமக்கு எந்த அளவுக்குத் தேவை என்பதைப் பொறுத்தே அந்த மதிப்பும் அமையும். அந்தப் பொருள் யாரால் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று நினைக்கும் போது எண்ணிறந்த மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்டது என்கிற போது அதற்கு மேலும் மதிப்பு உயருகிறது. பொருளினால் மதிப்பே தவிர எனது. என்னுடையது என்பதினாலே மதிப்பு உயருவதில்லை.

ஆகவே. இந்தப் பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பெற வேண்டுமானால் தவம். தற்சோதனை இந்த இரண்டும் அவசியம் வேண்டும். அந்தத் தவத்தைப் பெற்ற பாக்கியசாலிகள் நீங்கள். உங்களுடைய உள்ளம் உண்மையிலேயே மகிழ்ச்சியடையத் தான் செய்யும். குரு என்பவர் எங்கிருந்தோ வருகிறார் என்று எண்ண வேண்டாம். அது உங்களுடைய வினையின் பதிவு தான். நீங்கள் செய்த கர்மத்தின் மூலமாக. வினையின் பயனாக நல்லதைப் பெற வேண்டும். அடைய வேண்டும். முழு முதற் பொருளை அடைய வேண்டும் என்ற உங்களது எண்ணம் ஓங்க. ஓங்க உங்களது மனத்தின் ஊடே உள்ள அந்தச் சக்தியானது தானாகவே வழிகாட்டுகிறது.

# திருநெல்வேலி இறுதிக்கு நுழைவதற்கு வாய்ப்பு சென்றல், கொக்குவில் அணிகள் போராட்டம்

ஞானம்ஸ் பெயின்ற் நிறுவனம், விஜயரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற, அழைக்கப்பட்ட 4 விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

**திருநெல்வேலி கிரிக்கெட் அணி ஒரு விக்கெட்டால் திரில் வெற்றி**

இந்தச் சுற்றுப்போட்டியில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதற்கிணங்க களமிறங்கிய ஜொலிஸ்ரார்ஸ் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கஜானன் 71, மணிவண்ணன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக, சைலேஸ், சுரேந்திரன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

154 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய திருநெல்வேலி அணி, 19.4 ஓவர்களில் 9 வீக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அசோக் 58, லவகாந்தன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக, சாரங்கன் மற்றும் பிரசன்னா ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.



**கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் 31 ஓட்டங்களால் வெற்றி**

31 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. 19.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து, 144 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் றொசான் 31, பிரதாபன் 30, கே.ஜனுதாஸ் 29, ஜெயரூபன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் உமாதரன் 4 விக்கெட்களையும், பகிரதன் 3 விக்கெட்களையும், றுஸ்மன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜொலிஸ்ரார்ஸ் அணி, 19.4 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கஜாநந் 29, மணிவண்ணன் 21, சஜீகன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் அணி சார்பாக, றொசான் 4 விக்கெட்களையும், பிரதீஸ், நிமலதாஸ் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

**7 விக்கெட்களால் திருநெல்வேலி கிரிக்கெட் அணி வெற்றி**

31 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சென்றல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய சென்றல் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் றஜீவன் 42, திசாந்தன் 25, மில்லர் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

135 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய திருநெல்வேலி அணி, 14.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தர்சிகன் 47, அசோக் 40 ஓட்டங்களையும், சுரேஸ் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (க-26)

# கலைமதியின் வெற்றிக்கிண்ணம் நவஜீவன்ஸ் அணி வசமானது









கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் வெற்றாட்சியில் சிறந்த பத்து அணிகளுக்கிடையிலான மாபெரும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கொலின்ஸ் அணியினை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் இரண்டு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டன.

இறுதி நேரம்வரை வெற்றிக்கான கோலை அடிப்பதற்கு இரண்டு அணி வீரர்களும் கடுமையாக முயற்சி செய்தபோதிலும் அது இரு அணிகளுக்கும் கைகூடவில்லை.

ஆட்டம் 1:1 என சமநிலையில் நிறைவடைய வெற்றியைத் தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு ஆட்டம் நடத்தப்பட்டது. சமநிலை தவிர்ப்பு ஆட்டத்தில் 2:4 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்று கிண்ணத்தைப் பெற்று சாதனை படைத்தது.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணியின் பொபிநாதன் தெரிவு செய்யப்பட்டதுடன் சுற்றுப் போட்டியில் தொடர் நாயகனாக கொலின்ஸ் அணியின் ஆனந்தும் சிறந்த கோல்காப்பாளராக கொலின்ஸ் அணியின் சங்கரும் சிறந்த பின்கள வீரராக கௌதமனும் மக்கள் மனம் கவர்ந்த வீரராக கௌதமும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# இறுதிப் போட்டிக்குத் தெரிவானது கரவெட்டி ஞானம்ஸ் அணி

அரியாலை 99ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடத்திய மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தையும் இரண்டாவது சுற்றில் காமாட்சி விளையாட்டுக்கழகத்தையும் காலிறுதிப்போட்டியில் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தையும் அரையிறுதியில் இணுவில் கலைஒளி மன்றம் விளையாட்டுக்கழகத்தையும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம். (க)

# ஞானவைரவரை வீழ்த்தி விநாயகர் அணி சம்பியன்

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகமும் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்ட துடுப்பாட்டப்போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஞானவைரவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி எட்டு ஓவர்கள் நிறைவில் 89 ஓட்டங்கள் குவித்தது. 90 ஓட்டம் என்ற பாரிய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி விநாயகர் அணி எட்டாவது ஓவர் நிறைவில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வெற்றி இலக்கை அடைந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (க)



## கடன் வழங்கும் போது...

போதே, மத்திய வங்கியின் ஆளுநர் மேற்குறித்தவாறு குறிப்பிட்டார்.

கடன்களை வழங்கும் நிறுவனங்கள் குறித்து முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை செவிமடுத்த ஆளுநர், மத்திய வங்கியின் கீழ் வரும் கடன் வழங்கும் நிறுவனங்களை கண்காணிக்க நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்தோடு, க்டன் வழங்கலின் போது இடம்பெறும் மோசடிகளை தடுக்க உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (மு-1)

## வெளிநாட்டிலுள்ள...

கொள்ள நேரிடுமென ஐ.நா. ஆணையாளர் செயிட் அல்ஹுசைன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் சர்வதேச நீதிமன்ற கட்டமைப்பு 139 நாடுகளில் இயங்குகின்றது. இந்த நாடுகளுக்கு போர் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ வீரர்களின் பெயர் பட்டியலை அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தற்போது வெளிநாடுகளிலுள்ள இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (மு-1)

## 6 தமிழ் எம்.பிக்கள்...

டணியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே பிரதமர் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளனர்.

இந்தவகையில் தேசிய தொழிலாளர் முன்னணியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையக மக்கள் முன்னணியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இவ்வாறு ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய கட்சிக்கு கொடுத்த வாக்கினை காப்பாற்றினால் மாத்திரமே பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த தீர்மானம் அமையுமென அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## போரால் பாதிக்கப்பட்ட...

கில் 4 மாவட்டங்களை உள்ளடக்கி போரால பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதார த்தை உயர்த்துவதற்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு கடந்த வருடம் வடக்கில் உள்ள 169 குடும்பங்களுக்கு சுய தொழில் கடன் வழங்கப்பட்டது. குறித்த கடன் தொடர்பான முன்னேற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக இந்த வருடம் புதிய கடன்திட்டம் (என்ரப்பிறைஸ் ஸ்ரீலங்கா) ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து கடன் வழங்கப்படும்.

பல்வேறு செயற்திட்டத்தை உள்ளடக்கியதாக அந்த கடன்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குறிப்பாக குழு கடன் திட்டமாக அது அமைந்திருக்கும்.

இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் வருமானத்தை அதிகரிப்பதற்காகவே வழங்கப்படுகிறது. பலர் சிறு தொழில் முயற்சிகளிலேயே தற்போதும் ஈடுபட்டு வருகிறார்கள் எனவே அடுத்த கட்டமாக குழு தொழில் முயற்சியாளர்களுக்கு உதவ முன்வந்துள்ளோம். அவர்களுக்கான இட ஒதுக்கீடுகளையும் மேற்கொள்ள தயாராகவுள்ளோம்.

வரவு செலவுத்திட்டத்தில் வடக்குக்கு நுண் கடன்களுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அவை கூட்டுறவு சங்கத்தின ஊடாக வழங்கப்படும். குறித்த கடன் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகிறது. அவற்றின் மூலமும் வாழ்வாதாரத்தை சிறந்த முறையில் கொண்டு செல்ல முடியும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## யாழின் பல பகுதிகளில்...

காற்றும் வீசியது. இதனால் மரங்கள் பலவும் முறிந்து வீழ்ந்தன.

யாழ்ப்பாணத்தில பல நாட்களாக மழைப் பொழிவு இல்லாமையால் கடும் வெப்பம் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## கூட்டமைப்பு சந்தர்...

வாராந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் அறிக்கையின் ஊடாகவே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**கேள்வி:** பிரதமர் பற்றிய நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏப்ரல் 4ந் திகதி எடுக்கப்பட இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்று எண்ணுகின்றீர்கள்?

**பதில்:** இவ்வாறான சந்தர்ப்பங்கள் எழும் போது நாங்கள் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியையும் நான் கவனித்துள்ளேன். அவற்றின் தலைவர்கள் தனிப்பட்ட ரீதியில் தான் இவ்வாறான விடயங்களைக் கையாளுகின்றார்கள். மக்களைக் கேட்பதில்லை. ரணிலுக்கு எதிரான ஐ.தே.க உறுப்பினர்கள் தற்போது அவருடன் திரும்பவும் ஒன்று சேர ஒத்துக் கொண்டுள்ளார்கள் என்றால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ நன்மைகள் இணங்கப்பட்டுள்ளது என்று தானே அர்த்தம்! இந்தக் கொடுப்பனவுகள் தனிப்பட்டவாறான நன்மையா அல்லது மக்கள் சார்பான கோரிக்கைகளுக்கு ஈந்த கொடுப்பனவுகளா என்பது பற்றி வெளிப்படைத் தன்மை இருப்பதில்லை.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் வருவது அபூர்வம். அவற்றை தவற விடக் கூடாது. ஏன் என்றால் எந்த ஒரு சிங்களக் கட்சியும் தமிழ் மக்களுக்கு அவர்களின் நியாயமான உரித்துக்களை வழங்குவதற்கு பின்நின்றே தீரும். சிங்களத் தலைவர்கள் தம் மக்களிடம் தமிழ் மக்கள் சம்பந்தமாகக் கொண்டு சென்ற பிழையான, தவறான, தாறுமாறான கருத்துக்கள் அம் மக்களை இப்பொழுது ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. இன ரீதியாகப் பிழைகளைச் செய்து விட்டு இப்பொழுது அவற்றைச் சரிசெய்ய விளைந்தால் சிங்கள மக்கள் தங்கள் தலைவர்களின் தலையைக் கூடக் கொய்து விடுவார்கள் என்ற பயம் தலைவர்களுக்கு இருக்கின்றது. இந்தப் பயத்தின் காரணமாகவே தமிழர்களுக்குத் "தருவோம் தருவோம்" என்று கூறி விட்டு சிங்களத் தலைவர்கள் தராது இருக்கின்றார்கள். சில தடவைகளில் சில சிங்களத் தலைமைகளின் உள்ளார்ந்த எண்ணமே தமிழ் மக்களை எழும்ப விடக் கூடாது என்பது. ஆகவே தான் வெவ்வேறு சூழல் பிரச்சினைகளை எடுத்துக் காட்டி எமக்கு நன்மைகள் எதையுந் தராது ஏமாற்றி வருகின்றார்கள் சிங்களத் தலைவர்கள். சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவில்லை. உள்ளூர் அகதிகள் வாழ்க்கை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் கைவாங்கப்படவில்லை. படையினர் தொகை குறைக்கப்படவில்லை. இவ்வாறான கொடுக்கக் கூடாதென்ற மனோ நிலையில் இருந்து விடுபட்டு தமிழர்களுக்கு உதவ அவர்கள் முன்வருவதென்றால் அவர்களின் அரசியல் வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் வர வேண்டும். அரசியல்வாதிகளுக்கு கொள்கைகளிலும் பார்க்கச் சுயநலமே முக்கியம். எமது தலைவர்களுக்கும் சுயநலமே இதுகாறும் முக்கியமாகத் தெரிந்து வந்துள்ளது.

சுயநலப் பாதிப்பு என்று வந்தவுடன் சிங்கள மக்களைத் தமக்கு வேண்டியவாறு மனம் மாற்ற சிங்கள அரசியல்வாதிகள்முன் வருவார்கள். இப்பொழுது அவ்வாறானதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

சென்ற 2015 தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் கூட மகிந்தவுடன் சேர்ந்திருந்த ஒரு சிறுபான்மைத் தலைவர் திடீர் என்று ரணிலுடன் ஒரு ஒப்பந்தம் வைத்துக் கொண்டார். "நான் உங்களை ஆதரிப்பேன். எனக்கு இந்த அமைச்சு தரவேண்டும்" என்று. மேலும் பல கோரிக்கைகளையும் முன் வைத்தார். ரணிலின் நெருக்கடியான நேரத்தில் அவர் அதற்கு ஒப்புக் கொண்டேயாக வேண்டியிருந்தது. ஒப்புக்கொண்டார். பின்னர் அந்நபருக்கு அவர் கேட்ட குறிப்பிட்ட அந்த அமைச்சுப் பதவி கிடைத்தது. அவருக்குக் கொடுக்க வேண்டாம் என்று எம்மவர் ரணிலிடம் கூறிய போது நடந்ததை எமக்குக் கூறினார், ரணில். தான் வாக்குக் கொடுத்து விட்டதாகக் கூறினார். ஆகவே பெரும்பான்மை அரசியல் தலைவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகள் தான் இன்றைய அரசியல் அரங்கத்தில் சிறுபான்மையினருக்குக் கிடைக்கும் வரப்பிரசாதம். அதனை உரியவாறு பாவிக்க நாம் முன்வர வேண்டும்.

ஆனால் தனியொருவரோ இருவரோ இந்த ஒப்பந்தங்களை தமிழ் மக்கள் சார்பில் ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு அவர்கள் ஏற்படுத்த முன் தமிழ்ப் பொது மக்களின் கருத்துக்கள் கண்டறியப்பட வேண்டும். நாம் எடுக்கும் தீர்மானங்களுக்கு தகுந்த காரணங்களை வெளிப்படையாகத் தெரிவிக்க எமக்குத் திராணி இருக்க வேண்டும். ஓரிருவர் தமக்குள் குசு குசுத்து விட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாது. யார்சார்பில் நாங்கள் நடந்து கொண்டாலும் எழுத்து மூல உடன்பாடு ஒன்று இருக்க வேண்டும். அதன் பின்னரே எமது ஆதரவு வழங்கப்பட வேண்டும். அதற்கு மறுப்புத் தெரிவிப்போர் எவ்வாறு தமது காரியத்தைச் சாதித்துக் கொண்டதும் எமக்கு சார்பாக நடக்கப்போகின்றார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இரணிலின் நம்பிக்கையில்லாப் பிரேரணை எவ்வாறு செல்லும் என்று ஓரளவுக்கு அனைவருக்குந் தெரியும். அதனால்தான் அந்தப் பிரேரணையில் மகிந்த அவர்கள் கையெழுத்திடவில்லை. அவருக்குத் தோற்க விருப்பமில்லை. எனினும் நாங்கள் வந்த சந்தர்ப்பத்தைக் கைவிடக் கூடாது.

சிறிய சிறிய நன்மைகள் பலவற்றையும் தமிழ் மக்கள் தற்போதைக்கு எதிர்பார்த்து நிற்கின்றார்கள். அவற்றையேனும் பெற்றுக் கொடுக்க இது நல்லதொரு வாய்ப்பு.

நேற்று கௌரவ மங்கள சமரவீரவை சந்தித்த போது தமிழ் மக்கள் பிரச்சினைத் தீர்வு தடைபட்டுப் போகும் நிலையே இப்போது இருப்பதாகக் கூறினார். உடனே நான் "அப்படியானால் இரண்டு சிறிய விடயங்களை நீங்கள் செய்யுங்கள் அது எமக்கு ஓரளவேனுந் தென்பை ஏற்படுத்தும்" என்றேன். "என்ன?" என்று கேட்டார். ஒன்று மகாவலி அதிகாரசபைச் சட்டத்தை கைவாங்குமாறு கேட்டேன். மற்றது 1992ம் ஆண்டின் 58ம் இலக்கச் சட்டத்தைக் கைவாங்கக் கோரினேன்.

முன்னையது 1987ம் ஆண்டில் வந்த 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரப்பரவல் நிலையைக் கணக்கில் எடுக்காது தான்தோன்றித் தனமாக வடமாகாணத்தில் மகாவலி அதிகார சபை தனது நடவடிக்கைகளை எடுத்துச் செல்ல இடமளித்துள்ளது. "எல்" வலயத்தில் வெளி மாகாண மக்களைக் கொண்டு வநதுகுடியமர்த்தியது அச்சபையே. தொடர்ந்து பல குடியமர்த்தல்களுக்கு இன்றும் அத்திபாரம் போடப்பட்டு வருகின்றது. அரசாங்கத்திற்கு மேலான அதிகாரத்தை அச் சபை பிரயோகிக்க முடியுமாக இருக்கின்றது. ஆகவே அச்சட்டம் கைவாங்கப்பட வேண்டும். பின்னர் வேண்டுமெனில் 13-வது திருத்தச் சட்டக் கோட்பாடுகளுக்கு அமைய புதிய சட்டம் வரையப்படலாம் என்றேன்.

1992-ம் ஆண்டின் 58-ம் இலக்க சட்டமே அரசாங்க அதிபர்களை மாவட்ட செயலாளர்கள் ஆக்கி மாகாண சபைகளின் மேற்பார்வையின் கீழிருந்து மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் அவர்களைக் கொண்டு வந்தது. இதனால் மாகாணந்தோறும் இரு சமாந்திர அதிகார மையங்கள் நடைமுறையில் இருந்து வர இச்சட்டம் இடமளித்துள்ளது. அச் சட்டத்தைக் கைவாங்கினால் மீண்டும் 1987-ல் எதிர்பார்த்தவாறு 13-வது திருத்தச் சட்டம் சீர்செய்யப்பட்டுவிடும். இது நிரந்தர அரசியல் தீர்வல்ல. தற்காலிகமாக தமிழ் மக்களுக்கு நன்மை பெற்றுத்தர அரசாங்கம் எடுக்கக் கூடிய ஒரு வழிமுறை என்பதை எடுத்துக் கூறினேன்.

ரணிலின் நம்பிக்கையில்லாப் பிரேரணை தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அதற்கானவாறு கூட்டமைப்பின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்றார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். (மு-1)

## இராணுவத்தினர்...

த்தைச் சேர்ந்த, 200 இராணுவ வீரர்கள், மாலியில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், மாலியின் மொப்ரி நகர் நோக்கி பயணித்த இலங்கை இராணுவத்தினரை இலக்கு வைத்து 35 கிலோ கிராம் எடையுள்ள பாரிய கிளைமோர் குண்டு ஒன்று பொருத்தப்பட்டுள்ளதை இலங்கை இராணுவத்தினர் கண்டுபிடித்து அதனை செயலிழக்கச் செய்துள்ளனர்.

மேற்படி குண்டினை வெடிக்க வைக்க காத்திருந்த நபர் ஒருவரையும் இலங்கை இராணுவத்தினர் கைது செய்து மாலி நாட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (மு-1)

## கூட்டமைப்பின்...

தொடர்பில் இன்று தனது தீர்மானத்தை வெளியிடவுள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமோகன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும், பாராளுமன்ற எதிர்க் கட்சியினதும் தலைவர் ஆர். சம்பந்தன் தலைமையில் இன்று இது தொடர்பிலான கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானமே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் என அரசியல் தரப்புக்களில் தெரிவிக்கப்படுகிறது (மு)

## யாழ்.வைத்தியசாலை...

வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் கேட்டுகொண்டுள்ளார்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், வைத்தியசாலைக்கு அண்மையில் நேற்று காலை முதிய வருடைய சடலம் ஒன்று யாழ்.பொலிஸாரால மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் 65-70 வயது மதிக்கத்தக்க ஒரு முதியவருடையதாக காணப்படுவதாகவும், நீல நிற சேட் வெள்ளை நிற சறம் அணிந்துள்ளார். குறித்த சடலத்தின் அருகில் டயரி ஒன்று இருந்ததாகவும் ஆவரங்கால் மேற்கு சுரேந்திரன் என அதில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரை அடையாளம் காண்பதற்குரிய வேறு எந்தவிதமான அடையாளங்களும் காணப்படாததால் இவர் தொடர்பாக விபரம் தெரிந்தவர்கள் சடலத்தை அடையாளம் காட்டுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். சடலம் யாழ் போதனாவைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (மு-9)

## பருத்தித்துறையில்...

சாலையில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் பருத்தித்துறை நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதில் மாதாகோவிலடி, தும்பளையை சேர்ந்த இருதயநாதன் பிராஞ்சிஸ் செபமாலையம்மா (வயது-64) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறை-கொடிகாமம் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தியில் அவர் மோதுண்டதையடுத்து அதன் சாரதி வயோதிபமாதுவை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்.

வயோதிபமாதுவின் உறவினர்கள் என கூறப்படும் சிலரால் சாரதி தாக்கப்பட்டார்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (மு-60)

## ஐ.தே.க பாராளுமன்ற..

கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த வாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டங்கள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் பங்காளிக் கட்சிகளின் தலைவர் சந்திப்புகள் என இடம்பெற்று வந்த நிலையில் இன்று மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் கூடுகின்றது. பிரதமரின் அழைப்பின் பெயரில் இன்று காலை அலரிமாளிகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தனித்தனியே சந்தித்து நிலைமைகளை தெளிவுபடுத்தவும் பிரதமர் முயற்சித்து வருகின்றார் எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (மு-1)

## நம்பிக்கையில்லா...

தெரிவித்துள்ளார்

மேலும் நான்காம் திகதிக்குப் பின்னர் நாட்டில் அரசியல் பயணம் முற்றாக மாற்றமடையும் எனவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு கிடைப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நாட்டில் கடந்த மூன்று வருடங்களாக விவசாயம், தொழிற்துறைகளில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. முறிகள் கொடுக்கல் வாங்கலினால் பாரிய கொள்ளை இடம் பெற்றுள்ளது. இவற்றிற்கு எதிராக, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மேற்கொண்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## பதவிக்கான தேடல்

யாழ்குடாநாட்டில் முதன்மை நிறுவனமான DNMCசர்வதேச நிறுவனத்திற்கு நிலையான 12 பதவி வெற்றிடங்களுக்கு நேர்முகத்தேர்வு ஆரம்பமாகின்றது.விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொண்டு உங்களுக்கான நேரத்தை உறுதிப்படுத்துங்கள்.

- தகைமை O/L மட்டும் போதுமானது.
- முன் அனுபவம் அவசியமில்லை.
- வயதெல்லை 18-30

தொடர்பு: 0766767620, 0778485328

(3450)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

30 வருட கல்விச் சேவையில்... யாழ் நகரின் No1 கல்வி நிறுவனம்

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்

## O/L DAY CLASS

(பகல் நேர வகுப்பு)

பிரிவு I - ஆரம்பம்: 04.04.2018 புதன்கிழமை காலை 8.00 மணி

★ கடந்த (2017) O/L பெறுபேறுகளில் 95% சதவீத மாணவர்கள் சித்தி.
★ புதிய அனுமதிகள் இன்று முதல்.

T.P: 077 459 8440


## கார் வாங்கியமைக்கு...



தனியார் வங்கியொன்றில் கடமையாற்றும் குறித்த இளைஞன் கார் ஒன்று வாங்கியமைக்கு சக நண்பர்களுக்கு கடந்த 26 ஆம் திகதி லக்ஷபான நீர்வீழ்ச்சி பகுதியிலுள்ள ஹோட்டலில் விருந்து வழங்கிய சந்தர்ப்பத்தில் மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்த நிலையில் லக்ஷபான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை தொடர்வதாகவும் தெரிவித்தனர். (மு)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

T.P. 077 662 9137

அன்றும் இன்றும் என்றுமே O/L Day Class தனித்துவம் வாய்ந்தது

**O/L Day Class**

8 மணி To 2 மணி ஆரம்பம் 04.04.2018 க.பொ.த. 8 மணி

- கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
- யாழ். நகரில் Day Class இங்கு மட்டுமே
- பிரிவு I 60 மாணவர்களுக்கு மட்டும்
- 40 வருட தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- 03.04.2018 முன் அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்
- பிரிவு II மிக விரைவில்
- பாடசாலை மாணவர்களுக்கு சனி, ஞாயிறு

ஆண்டு 06 தொடக்கம் O/L வரை 8.00 மணி தொடக்கம் 2 மணி. அனுமதிகள் வழங்கப்படுகிறது.

(C-2043)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg

கனடா - 1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு 0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)

## A/L - 2020

புவியியல் : N.BABU

- ஆட்ஸ் அக்கடமி - புத்தூர்
- தமிழியற் கல்லூரி - கோப்பாய்
- மகுடம் - உரும்பிராய்
- விரும்பிய இடங்களில் அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம் (தனிப்பாட அனுமதி உண்டு
- ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
- நேர அட்டவணை அலுவலகத்தில் பெறலாம்.

தொடர்பு: 0779365087

(3483)

O/L சித்தியடையவில்லையா???

## வேலைவாய்ப்பு

எமது GMI நிறுவனத்தில் இணைய புதிய வாய்ப்புக்கள். யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய எமது கிளைகளுக்கு 20 உயர் பதவி வெற்றிடங்களும் 40 பேர்களுக்கு பதவி வெற்றிடங்களும் உள்ளன. நேர்முகத் தெரிவின் மூலம் பதவிகள் தெரிவு செய்யப்படும்.

- 18-35 வயதிற்குட்பட்டவர்கள்.
- முன்னனுபவம் அவசியமில்லை.
- தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
- பயிற்சிக் காலகட்டத்தில் 18,000/= வரையிலும் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் 45,000/= மேல் (EPF, ETF) அடங்கலுடன் வழங்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள்...

0779994807, 0778021371

(3487)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



## செல்வி றஜீகா ஜீவச்சந்திரன்

மலேசியாவில் PWTC மண்டபத்தில் 21.03.2018 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் BBA (Bachelor of Business Administration) பட்டம் பெற்றதையிட்டும், 31.12.2017 அன்று இலங்கை BMICH மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் HND Management பட்டம் பெற்றதையிட்டும் அவரை மனதாரப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*


அப்பா (ஜீவச்சந்திரன்), அம்மா (புஸ்பவதனா),
நஞ்ஜித் குடும்பத்தினர், ஜெயமாறன் குடும்பத்தினர்,
வஜீகரன் குடும்பத்தினர் - *இமையாணன்*

## காணி விற்பனைக்கு

HARI REAL ESTATE
A TRADITION OF TRUST

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதிக்கு அண்மையில் தட்டாதெரு சந்தியிலிருந்து 200 Mt உட்புறமாக 1½ பரப்பு காணியும், பொற்பதி வீதியில் 04 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு
(நன்னீர் வளம் மற்றும் நட்புறவான சுற்றயல்)

உங்கள் நிலையான சொத்துக்களைக் கண்டறிய நாம் உதவுகின்றோம்...
தேவையற்ற அலைச்சல்களில்லை, வெளிப்படைத்தன்மை மற்றும் குறைந்த சேவைக்கட்டணம்




(C-2673)

'ஹரி றியல் எஸ்டேட்'... நம்பிக்கையின் பாரம்பரியம்

இல.10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (வேம்படி சந்தி அருகாமை)

துரித அழைப்புகளுக்கு : அலுவலகம் +94 21 221 4422 மொபைல் +94 70 300 4000

மின்னஞ்சல் contact@harirealestate.com

முகநூல் harirealestate.lk

POWERED BY HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
- அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டட தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

(C-2070)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.